# எழுநிலம்

மாத இதழ் | மனம்- 2 | மே 2021 | திருவள்ளுவர் ஆண்டு 2052

## முள்ளிவாய்க்கால் வலி சுமந்த சிறப்பிதழ்














"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும் பெருமையின் பீடுடையது இல்"

எழுநிலம்


முள்ளிவாய்க்கால் விசேட இதழ்

மே 2021

தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com

## திருக்குறள்



"கருமம் செயஒருவன்
கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்"

உரை –

வீட்டையும் நாட்டையும் மேன்மை அடையச்செய்யும் கடமையைச் செய்வதற்கு சோர்வடைய மாட்டேன் என ஒருவன் மன உறுதிகொள்ளும் பெருமையைக் காட்டிலும் மேலான பெருமை வேறு இல்லை.

### ஆசிரியர் பக்கம்

# முள்ளிவாய்க்கால் வகுக்கும் புதிய உலக ஒழுங்கு

சிங்கள பேரினவாதிகள், உலக பயங்கரவாத அரசுகளுடனும், விடுதலை அமைப்புகளை சிதைக்கும் நிறுவனங்களுடனும் கை கோர்த்து அரங்கேற்றிய மனிதப் பேரவலம் நிகழ்ந்து ஆண்டுகள் 12 ஆகிவிட்டன. இன அழிப்பிற்குள்ளாக்கப்பட்ட 140,000 இற்கும் மேற்பட்ட எம்மக்களுக்கான பதில் என்ன?

சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன் கூடிய ஒரு நடைமுறை அரசை நிறுவி, அதைத் திறம்பட நடத்தி, தமிழ்மக்களின் பாதுகாவலர்களாக இருந்தவர்கள் விடுதலைப்புலிகள். அவர்களின் மூலோபாயங்கள் உலக பயங்கரவாத அரசுகளுக்கு ஒரு அச்சுறுத்தலாகவே இருந்து வந்தது. யுத்தமூலம் அடிபணிய வைக்கவியலாத நிலையில், யுத்த தர்மத்தை மீறிய கூட்டுச்சூழ்ச்சியின் மூலம் புலிகளின் ஆயுதங்களை மௌனிக்க வைக்கிறோம் என்ற போர்வையில் நடத்தப்பட்ட பாரிய இனவழிப்பு எந்தவொரு தமிழனின் மனதை விட்டும் அகலப்போவதில்லை. இந்த நிலையில்தான், உலகப் பொது ஒழுங்கை மாற்றியமைப்பதற்கான பொறிமுறையாக முள்ளிவாய்க்காலும் நந்திக்கடலும் அமைந்துவிடுகின்றன.

'இனவழிப்பு' என்ற பதம்நோக்கி நகரத்தொடங்கியுள்ளது மனித உரிமைகளுக்கான விசாரணை. மாறிவரும் புதிய உலக ஒழுங்கில், உலக பயங்கரவாத அரசுகள் நெருக்கடிகளுக்குள் தள்ளப்பட்டிருப்பதைப் பார்க்க முடிகிறது. இது ஒரு அழிவிற்கான பயணமாக அமையும் என்பதை உலக அரசியற் களத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும், அழிவு சக்திகளுக்கிடையேயான போட்டிகளும் கோடிட்டுக் காட்டுகின்றன.

விடுதலை தேடும் இனங்கள் அனைத்துக்குமே சாதகமாகிக் கொண்டுவரும் இச்சூழலை நாம் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப்போகிறோம்? எங்களுடைய விடுதலைக்காக நாங்கள்தான் போராடவேண்டும் என்பது கசப்பான ஒரு உண்மை. தமிழ்த் தேசிய சக்திகள் எல்லாம் ஒன்றிணைந்து, தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம், புவிசார் அரசியலின் தன்மையை மாற்றியமைத்து எம்மை தேசியத்தின்பால் தள்ளிச் செல்லப் போகின்றோமா? இல்லை, பிரித்தாளும் தந்திரத்துடன் எம்முள்ளிருந்தே குழிபறிக்கும் சூழ்ச்சியில் சிக்கி சின்னாபின்னமாகப் போகின்றோமா?

••••••••••••••••••••••••••

# பின் முள்ளிவாய்க்கால்



ந.மாலதி

முள்ளிவாய்க்கால் தாயகத்தின் வட-கிழக்கு கடலோரத்தில் உள்ள ஒரு இடம். இன்றோ இச்சொல் தாங்க முடியாத வலியை புணர்ந்து வீறுகொண்ட ஒரு சக்தியை கருவுற்றிருக்கிறது. இதுபெற்றெடுக்க போகும் அச்சக்தி எவ்வாறிருக்கும்?

2007 - 2008ம் ஆண்டுகளில் அக்கருவின் வரலாறு வடிவெடுக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கு குழிகள், தொடரும் இடப்பெயர்வுகள், மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்த இடங்களில் பதுங்கு குழிகள் வெட்டுதல், வீதியோரங்களில் வாழ்க்கை, உணவு மருந்து அற்ற வாழ்க்கை, வாழ்க்கையின் அடிப்படை தேவைகள் எதுவுமே கிடைக்காத வாழ்க்கை. இரண்டு ஆண்டுகளும் வானத்தில் எம்மை தேடி வந்த குண்டு விமானங்களை தேடின பார்வை. விமானக் குண்டுகளாலும் செல்வீச்சுக்களாலும் கிளேமோர் தாக்குதல்களாலும் பொது மக்கள் சாவு சதாரணமாகிவிட்ட வாழ்க்கை. 2009 சனவரியிலிருந்து ஏப்பிரல் வரை மக்கள் கொலைகளை அதிகரிப்பதற்காக பாதுகாப்பு வலயங்கள் என்று பெயர் சூட்டப்பட்ட மூன்று கொலைக் களங்கள்.

## 2009 மே மாதம் முள்ளிவாய்க்கால்

மணலில் கட்டப்பட்ட பதுங்கு குழிகள் சரிவதும் அதிலிருந்து வெளியே வருவதே சாவைத் தேடி என்றாகிவிட்ட வாழ்க்கை. இறந்த குழந்தையுடன் தாய், தாயின் வயிற்றிலிருந்து செல்துண்டுகளுடன் பிறக்கும் குழந்தை, தொடர்ந்த கைதுகளும் காணாமல் போதல்களும். இதுதான் தாங்க முடியாத வலியையுணர்ந்து வீறுகொண்ட ஒரு சக்தியை கருவுற்றிருக்கும் முள்ளிவாய்க்கால்.

இப்போது பின் முள்ளிவாய்க்கால் காலம். இது வெளியாரின் காலம். முள்ளிவாய்க்காலை நியாயப்படுத்துவது ஒருபுறமும், குற்றம் செய்த தங்கள் மனச்சாட்சிக்கு மருந்தாக சிங்கள அரசை கண்டிப்பது ஒருபுறமும், தாம் ஈழத்தமிழரை பற்றி கரிசனை கொள்வதாக ஏமாற்றுவதற்கு சில செயற்பாடுகளும் என்றாகிவிட்ட காலம். அவ்வாறு வந்தது தான் பாதி உண்மைகளை மட்டுமே பேசிய சனல்-4 ஆவணப்படங்கள். பிரான்சிஸ் ஹரிசன், யஸ்மின் சூக்கா போன்றவர்களும் இதே போலத்தான் - அதிகார சக்திகளிடம் சம்பளம் வாங்கி ஈழத்தமிழர்களுக்காக கண்ணீர் வடிப்பவர்கள். மூன்று நிபுணர்கள் கொண்ட ஐநா குழு அறிக்கையோ இனவழிப்பு என்று சொல்ல மறுத்தது. பின்னர் ஐநாவின் ஒரு பெற்றி அறிக்கை தன் நற்பெயரை நிலைநாட்ட தன்னையே கண்டித்தது. ஆனால் அதில் தமிழருக்கு என்ன கிடைத்தது? தொடர்ந்து ஐநா மனித உரிமை கவுன்சில் இதை தன் கையில் எடுத்து 19/2, 22/1, 25/1, 30/1, 34/1, 40/1 என்று தமிழர் என்ற சொல்லே இல்லாத பல ஏமாற்று தீர்மானங்கள்.

2019 இல் ஐநாவின் இனவழிப்பு தடுத்தலுக்கான

ஆலோசகர் மதம் சார்ந்த வன்முறைகளை கண்டிக்கும் போது இஸ்லாமியர்கள் என்றும் கிறிஸ்தவர்கள் என்றும் குறிப்பிடுகிறார். தமிழர்கள் என்ற ஒரு இனம் மட்டும் ஐநாவின் பார்வையில் இத்தீவில் கிடையவே கிடையாது. இடையில் சிங்கள அரசு ஏற்கவே ஏற்காது என்று தெரிந்தும் கலப்பு நீதி மன்றம் ஒன்றை ஐநா முன்மொழிகிறது.

2018 இல் வருகிறார் கோதபாய என்னும் சிங்கள தலைவர். மேற்சொன்ன வெளியாருக்கு பயம் தட்டியது. ஐநாவின் கூச்சல் பல படிகள் மேலே போனது. ஐநாவின் மனித உரிமை ஆணையாளரின், இவர் ஐநாவின் மனித உரிமை கவுன்சிலுக்கு வெளியே இயங்குபவர், கடுமையான ஒரு அறிக்கையில் சிங்கள அரசை சர்வதேச குற்றவியல் மன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றது.

இன்று பல தமிழர்களுக்கு பூகோள அரசியல் காற்றோடு அடித்து செல்லப்படும் ஐநாவைப் பற்றி ஓரளவு விழிப்புணர்வு வந்து விட்டது. இது ஈழத்தமிழர்களுக்கு மட்டுமே நடப்பதல்ல என்ற புரிதலும், ஐநா என்ற அமைப்பே வல்லரசுகளின் கையில் அகப்பட்டு கிடக்கும் ஒரு அமைப்புத்தான் என்ற தெளிவும் எமக்கு தேவைதான். இதையும்விட முக்கியமாக, பாலஸ்தீனர்களையும் குர்துக்களையும் போல நாமும் வல்லரசுகளின் முக்கிய தேவைகள் என்ற வலைப்பின்னலில் சிக்கியுள்ளோம் என்ற புரிதலையும் அடைய வேண்டும். பெரும் சக்திகளின் கப்பல் படை மற்றும் வர்த்தக கடற் பாதைகளின் தேவைகளே எம்மை இதில் சிக்க வைத்துள்ளன.

ஒரு குர்து ஊடகவியலாளருக்கும் பேராசிரியர் அன்டி ஹிகின்பொத்தமுக்கும் இடையே நடந்த உரையாடிலின் சிறு பகுதியை கீழே பாருங்கள்.

கேள்வி: ஐநா என்பது நாடுகளின் அமைப்பு என்பதால் அது எடுக்கும் முடிவுகள் ஐநாவில் உள்ள வல்லரசுகளின் நலன்களுக்கு எதிராக ஒருபோதும் இருக்காது என்பதை நாங்கள் மீண்டும் மீண்டும் பார்த்து வருகிறோம்.

இப்போது பேராசிரியர் குறுக்கிட்டு கேள்வியை திருத்துகிறார்.

“நீங்கள் சொன்னது சரி. இந்த அரசுகளின் கூட்டமைப்பில் நாடு இல்லாத தேசங்கள் புறக்கணிக்கப்பட்டு வருவது எப்போதும் நடந்து வருவது தான். அப்படித்தான் அது இருக்கும். ஆனால் உலகில் குறிப்பிட்ட சில பகுதிகளில் இதற்கு மேலும் ஒரு சிக்கல் உள்ளது. துரதிஷ்டவசமாக துருக்கி மக்களின் நிலம் மத்திய கிழக்கில் இருக்கிறது. பாலஸ்தீன மக்களும் இதே காரணத்தில் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். தமிழர்களும் அதே போலத்தான். இவர்கள் எல்லோருமே ஏகாதிபத்திய சக்திகளின் தேவைகளில் அகப்பட்டு திணறுகிறார்கள்”




பாலஸ்தீனர்களைப் போலவும் குர்துக்களைப் போலவும் நாமும் வல்லரசுகளின் தேவைகள் என்ற வலையில் சிக்குண்டு இருந்தால், இதிலிருந்து விடுபட இவர்களுக்கு வழி உண்டா? பாலஸ்தீனர்களுக்கு நடந்ததை, நடந்துகொண்டிருப்பதை பார்க்கும்போது ஏனைய உலக அரசுகளின் ஆதரவு இருந்தாலும் கூட இவ்வாறு வல்லரசுகளின் தேவைகளில் சிக்குண்டு இருக்கும் தேசிய இனங்களுக்கு விடிவு வராது என்றே தோன்றகிறது அல்லவா? முக்கியமாக நவதாராளவாதம் கோலோச்சும் உலகில் இதுதான் நிலைமை. ஒருவிதத்தில் பார்த்தால் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் ஒரு புரிந்துணர்வு வந்தாலும் கூட வல்லரசுகளின் தேவைகள் இத்தீவை சும்மா விடப்போவதில்லை. ஏதாவது முரண்களை தோற்றுவித்து அதனூடாக தங்கள் ஆதிக்கத்தை இத்தீவில் நிலைநாட்டவே முயற்சிப்பார்கள் என்றுதான் தோன்றகிறது. இதிலும் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும் தமிழர்களாகத்தான் இருப்பார்கள்.

நவதாராளவாத உலக ஒழுங்கும், அதையொட்டிய வல்லரசுகள் ஆதிக்கம் செலுத்தும் பூகோள அரசியலும், அதனோடு இசைவாக இயங்கும் ஐநாவும் உள்ளவரை ஈழத்தமிழருக்கான தீர்வு எனக் கூறப்படுவது இருவகையாக அமையலாம் போல் தென்படுகிறது. ஒன்று, வேறுபட்ட வடிவங்களில் தமிழின அழிப்பு தொடர அனுமதிப்பது இரண்டு, இஸ்ரேல் போன்ற ஒரு தீர்வை ஏற்படுத்தி, ஆதிக்க சக்திகளுக்காக கொடுஞ் செயல்கள் புரியும் ஒரு இயந்திரமாக தமிழர்களை பயன்படுத்துவது. இவ்விரண்டு முடிவுகளில் மிகவும் வேண்டாத வழி எதுவென்று கேட்டால் தமிழர்கள் என்ன சொல்வார்கள்? முதலாவது வழியா அல்லது இரண்டாவது வழியா? எனக்கு இரண்டாவது வழிதான் மிகவும் வேண்டத்தகாத வழியாக தோன்றுகிறது. ஆனால் தமிழர்கள் பலர் இரண்டாவது வழியில் செல்கிறார்கள் போல உங்களுக்கு தெரிகிறதா? இவ்விரண்டையும் விட நாம் ஏக்கத்துடன் எதிர்பார்க்கும் மூன்றாவது இடமொன்றும் உண்டு.

அதுதான் ஒரு புதிய நீதியான உலக ஒழுங்கில் எமக்கான தீர்வு.




## வலி சுமந்த நாட்கள்

# முள்ளிவாய்க்கால் 2009 மே மாத எண்ணங்கள்

அம்பலம் சிவராசா

மே மாதம் மரணத்தறுவாயில் நாம் நின்றுகொண்டிருந்த மாதம். எண்ணங்கள் பல வந்து போயின. துன்பம் வரும் போது சுகமாக வாழ்ந்த வாழ்வும் நினைவுக்கு வரும். அதுபோல் 1985 - 2009 வரை, யாழ் குடாநாட்டிலும் வன்னியிலும் தமிழீழ அரசு வீற்றிருந்ததும், அங்கே சுதந்திர தமிழீழ அரசின் கீழ் வாழ்ந்த உணர்வுகளும் வந்தன.

இராணுவத்திற்குப் பயந்து ஓடிய மக்கள் எல்லாம் மே மாதத்தில் அவர்களின் பிரதேசத்தில் நுழையக்காத்திருந்த போது பலவிதமான பயங்கள் மனதில் உருவாகி இருந்தன.

வெலிக்கடைச் சிறைச்சாலை நிகழ்வுகளும், பூசா முகாமில் துன்பங்கள் பற்றிப் பலரும் சொல்லக் கேட்ட நினைவுகளும் வரத் தொடங்கின.

இராணுவத்தின் வேட்டொலிகள் பல திசைகளில் இருந்தும் வந்துகொண்டிருந்தன. தம்மைத் தாக்கக்கூடும் என்ற பயப்பீதியில் வட்டுவாகல் பாலம் நோக்கி சென்றனர் மக்கள். இத்தாக்குதல்கள் எல்லாம் மக்களை நோக்கியே நடாத்தப்பட்டுக்கொண்டிருந்தன. .

மேலும், காலம் பலவாக காத்திருந்த போது கிடைத்த தலைவனின் எண்ணமும், தன்னிகரில்லாத் தளபதிகள், வீரத் தியாகம் மிகுந்த விடுதலைப் போராளிகளின் எண்ணங்களும் கூடவே வந்து சென்றன. பெரியவர்கள், சிறியவர்கள், குழந்தைகள், எனப்பல தரத்தினரின் காயப்பட்ட கோலங்களும் இறந்து கிடந்த காட்சிகளும் மனக்கண்முன் வந்து கொண்டிருந்தன.

வலயர் மடத்தின் தரவை நிலத்திலும், முள்ளிவாய்க்காலிலும் நெல் குத்திய மில்களின் காட்சியும் கண்களை விட்டு நீங்கவில்லை. வேறோரிடத்தில் கஞ்சிகள் காச்சி மக்களுக்கு கொடுத்த இடம் குண்டுத் தாக்குதலுக்கு உட்பட்டு பாத்திரங்கள் உடைபட்டும் கஞ்சி ஊற்றப்படும் இருந்த காட்சியை பார்த்திருந்ததும் மறக்கமுடியாதவை.



# போது ஒழுங்கை மாற்றியமைப்பதற்கான பொறிமுறை

**தமிழ்த் தேசிய சக்திகள் எல்லாம் ஒன்றிணைந்து தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம் புவிசார் அரசியலின் தன்மையை மாற்றியமைத்து எம்மை நாம் தேசியத்தின்பால் தள்ளிச்செல்லப் போகின்றோமா? இல்லை பிரித்தாளும் தந்திரத்துடன் எம்முள்ளிருந்தே குழிபறிக்கும் சூழ்ச்சியில் சிக்கி சின்னாபின்னமாகப் போகின்றோமா?**



சிங்கள பேரினவாதிகள், உலக பயங்கரவாத அரசுகளுடனும், விடுதலை அமைப்புகளை சிதைக்கும் நிறுவனங்களுடனும் கை கோர்த்து அரங்கேற்றிய மனிதப் பேரவலம் நிகழ்ந்து ஆண்டுகள் 12 ஆகிவிட்டன. இன அழிப்பிற்குள்ளாக்கப்பட்ட 140,000 இற்கும் மேற்பட்ட எம்மக்களுக்கான பதில் என்ன?

சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன் கூடிய ஒரு நடைமுறை அரசை நிறுவி, அதைத் திறம்பட நடத்தி, தமிழ்மக்களின் பாதுகாவலர்களாக இருந்தவர்கள் விடுதலைப்புலிகள். அவர்களின் மூலோபாயங்கள் உலக பயங்கரவாத அரசுகளுக்கு ஒரு அச்சுறுத்தலாகவே இருந்து வந்தது. யுத்தமூலம் அடிபணிய வைக்கவியலாத நிலையில், யுத்த தர்மத்தை மீறிய கூட்டுச்சூழ்ச்சியின் மூலம் புலிகளின் ஆயுதங்களை மௌனிக்க வைக்கிறோம் என்ற போர்வையில் நடத்தப்பட்ட பாரிய இனவழிப்பு எந்தவொரு தமிழனின் மனதைவிட்டும் அகலப்போவதில்லை. இந்த நிலையில்தான், உலகப் பொது ஒழுங்கை மாற்றியமைப்பதற்கான பொறிமுறையாக முள்ளிவாய்க்காலும் நந்திக் கடலும் அமைந்துவிடுகின்றன.

யாழ் பல்கலைக்கழகத்திலிருந்த நினைவுத் தூபி உடைப்பின் வடு இன்னும் ஆறாத நிலையில், தமிழ்மக்களிற்கெதிரான இன்னுமொரு ஈனச் செயலை அரங்கேற்றியிருக்கிறது சிங்கள அரசு. கடந்த 11 வருடங்களாக, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில், அங்கு அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத்தூபியருகில் மக்கள் கூடுவதற்கும் இனப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செய்வதற்கும் எதிராக சொல்லொணாத் துன்பங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள். அதன் உச்சமாக, 12.05.21 அன்று இரவோடிரவாக, ஏற்கனவே அங்கிருந்த நினைவுத்தூபி இடித்து அழிக்கப்பட்டிருக்கிறது. புதிதாக நடுவதற்காகக் கொண்டுபோய் வைக்கப்பட்டிருந்த சுமார் 2000 கிலோ எடையுள்ள நினைவு நடுகல்லும் காணாமற்போயுள்ளது.

ஏற்கனவே இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த அந்தப் பிரதேசத்தில், இரவிரவாக இராணுவ கனரக வாகனங்கள் அன்று ஓடித்திரிந்ததும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டதும் என்ன நிகழ்ந்தது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

கொரோனாவைக் காரணம்காட்டி இந்த வாரம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப-

பதானது 12வது ஆண்டு நினைவேந்தல் வாரத்தை எப்பாடுபட்டேனும் தடுத்துவிடவேண்டும் என்பதன் வெளிப்பாடே. அதேசமயம் எமது நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கைகளைத் திட்டமிட்ட வகையில் துரிதப்படுத்தியுள்ளது சிங்களம்.

தமிழர் நிலமான முல்லைத்தீவுப் பிரதேசத்திலுள்ள குருந்தூர்மலையில் கோயிலை அகற்றி, அவ்விடத்தில் விகாரை கட்டும் பணி முனைப்பாக நடைபெறுகிறது. கோயில்கள் இருக்கும் இடங்களிலெல்லாம் அகழ்வாராய்ச்சி என்ற சதித்திட்டத்தின் பெயரில் விகாரைகள் எழுப்பப்படுகின்றன. எங்கள் நிலம் இப்போது வெளிப்படையாகவே கபளீகரம் செய்யப்படுகிறது.

அதேசமயம், மாறிவரும் புதிய உலக ஒழுங்கில், உலக பயங்கரவாத அரசுகள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பதையும் பார்க்க முடிகிறது. இது ஒரு அழிவிற்கான பயணமாக அமையுமென்பதை உலக அரசியற்களத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளும், அழிவு சக்திகளுக்கிடையேயான போட்டாபோட்டிகளும் கோடிட்டுக் காட்டுகின்றன. இதில் இரு பெரும் சக்திகளாக, அமெரிக்க தலைமையிலான மேற்கும் சீனாவும் போட்டிபோடுகிறது. உலகில் உள்ள மூன்றாவது பெரும் சக்தியாக உலக மக்கள் சக்தியை நாம் மறந்துவிடலாகாது. இந்த மக்கள் சக்தியின் பகுதியாகத்தான் நாமும் இருக்கிறோம்.


**இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த அந்தப் பிரதேசத்தில் இரவிரவாக இராணுவ கனரக வாகனங்கள் அன்று ஓடித்திரிந்ததும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டதும் என்ன நிகழ்ந்தது என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன**

இவ்வகையில், யாழில் ‘மரபுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான அமையம்’ அமைக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். எங்களுடைய விடுதலைக்காக நாங்கள்தான் போராட வேண்டும் என்பது கசப்பான ஒரு உண்மை. தமிழ்த் தேசிய சக்திகள் எல்லாம் ஒன்றிணைந்து, தொடர்ச்சியான போராட்டங்கள் மூலம், புவிசார் அரசியலின் தன்மையை மாற்றியமைத்து எம்மை நாம் தேசியத்தின்பால் தள்ளிச்செல்லப் போகின்றோமா? இல்லை, பிரித்தாளும் தந்திரத்துடன் எம்முள்ளிருந்தே குழிபறிக்கும் சூழ்ச்சியில் சிக்கி சின்னாபின்னமாகப் போகின்றோமா?



# வலி 2

# அப்பா



தன்னிகரற்ற தமிழ் வீரம்
அவனி எங்கும் முழங்க,
கயவன் படை கதிகலங்க – ஈழக்
காதலுடன் களமாடினீர்களே அப்பா !

ஈழமறவர் வீரமறிந்து
வஞ்சகம் தான் வழியென – நாற்
புறமிருந்து நச்சினை உமிழ்ந்த
கோழை வஞ்சகர் முன்னும்
நெஞ்சை நிமிர்த்தி நின்றீர்கள் அப்பா

நாற்புறமும் பன்னாட்டு
பட்டாளங்கள் சூழ
உன்னத தமிழ்த் தேசம்
பல நூறாண்டு வாழ
ஆனந்தபுர களம் கண்டு
விதையாகிப் போனீர்களே அப்பா !

நீங்கள் இல்லா சோகம் – எமை
நொடிதோறும் வாட்டும்
உங்கள் மடிதனில் உறங்க – மனம்
நாளெல்லாம் ஏங்கும்

மீளாத்துயர் எமைச்
சூழ்ந்து துவட்டுகின்ற போதும்
நீங்கள் களம் நின்ற வீரம் அறிந்து
மனம் அமைதி கொண்டெழும்பும்
வீழ்வே இல்லை உங்களுக்கு
வீரர் வீழ்வதில்லை என்றும்
வீரவணக்கம் அப்பா !

இனமானம் காக்க இன்னுயிர் ஈந்தோரே
நேற்றுப் போல் நீண்டிருக்கும்
நினைவுச் சரங்களென
காற்றோடு கலந்து போன
கண்ணிறைந்த தெய்வங்களே !
தோற்போமா? இல்லைத்
துணிந்தெழுவோம் ! – என்று
வீச்சோடு விடுதலைக்காய் வாழ்வை,
விதைத்திட்டவித்துக்களே !

நாற்புறமும் சாவு எமை
நாடித் தொலைக்கையிலே
பார்ப்போமே ஒரு கை !
பகையழிப்போம் என்று
மூச்சானமான முதல்வனோடு
கரம் கோர்த்து
முடிவெடுத்து முரசறைந்த
முத்துக்களேயுமைப்போற்றுகிறோம் !

கொண்ட பெருங்கொள்கையிலே
குறியாகி நின்றீர்
கண்ட தடைகளையே
கணப்பொழுதில் வென்றீர்
நின்ற களங்களிலே நெருப்பெனப்
பகை தின்றீர்
என்றுமுலகுள்ளளவும் மனதிருப்பீர் !
தலை வணங்குகிறோம்!

உள்ளிருந்தூறும் அன்பைக்
கண்ணீரில் நினைத்து
உருகியுருகியே மலர்களாய்
உம் தாள்களிலே சாற்றுகிறோம்
சொல்லெடுத்துக் கவிபாடிச்
சோர்ந்திருக்கும் மனதை
வெல்லவென முயன்றும்
விழுந்து துவண்டு வாடுகிறோம்!

கண்மணிகாள் நும் நினைவில்
காலம் கழிகிறது
ககனமது உள்ளளவும்
கவலையது கழியாதே !
“என்ன துயர் வந்திடினும் எழுந்திடுக”
என்னுமுச்சங்கள்
எழுச்சிமிகு சிந்தனையில்
ஏற்றங்கொள்வோம் ! நிமிர்ந்திடுவோம் !

தேனுஜா
அமலதாஸ்






# அந்த கொடிய நாட்கள்

பாதுகாப்புவலயம் வாவென -எம்
மக்களை அழைத்த சிங்களம்-எம்மை
கூட்டாய் கொன்று குவித்த
அந்தக் கொடிய நாட்கள்

உண்ண உணவின்றி
உடுக்க உடையின்றி
குடிக்க நீரின்றி
படுக்க நிலமின்றி
பதுங்கிய குழிக்குள்ளேயும்
கூவி வந்த பீரங்கிகள் எம்மை கூட்டாய்
கொன்று குவித்த அந்த நாட்கள்

தாயை இழந்து பாலுக்கழுத
குழந்தைகள் கூட
பராமரிக்க யாருமற்று
பரிதவிக்க நீண்ட நாட்கள்
பக்கத்தில் காயப்பட்டு
இரத்த வெள்ளத்தில் கிடந்தவரை
காப்பாற்ற முடியாமல்
கடவுளை இரஞ்சிய நாட்கள்
காலிழந்து நடையிழந்தவரை
கூடநின்று ஊன்று கோல்
கொடுக்க முடியாமல்
குண்டுகள் துரத்திய
அந்த கொடிய நாட்கள்

உயிரின் உன்னதம் புரியாத அரக்கர்களின்
ஆட்டம் அரங்கேற
சர்வதேசத்தின் கண்கள்
திறக்காதா? என
ஏங்கிய நாட்கள்
என்றும் துவண்டு விடாத
தமிழினம் அன்று
சூழ்ச்சி மிகுந்த தேசங்களின் சுயநலத்தால்
துண்டு துண்டாய் சிதறிய
துரதிஸ்ட நாட்கள்
சூழ்ந்து வந்த சூழ்ச்சிகளால்
சூறையாடப்பட்ட நாம்
வலுவிழந்து வந்த அந்த
கொடிய நாட்கள்

இழக்ககூடாதவை எல்லாம் இழந்து
வந்தோம் நாங்கள்
கடக்க கூடாதவை
எல்லாம் கடந்து வந்தோம்
நாங்கள்
அத்தனையும் இழந்து விட்ட
அந்த கொடிய நாட்கள்
ஆறா வடுக்களாய்
இன்றும் எம் மனங்களில்........




அகிலினி






# கனவில் ஒருநாள்

சோ.... என்ற மழை அன்று..

அக்கா நிலாவும், தங்கை அகலும் புது வீட்டின் முன்னே மழைக்குள் மயில்களாய் ஆடிக் கொண்டிருந்தனர். அக்காமார்களைப் பார்த்துத் தம்பியும் மழைக்குள் மயிலானான்.

மழை நின்றதும் மூவரின் காகிதக் கப்பல்களும் பயணப்பட ஆரம்பித்தன. இப்படியாக அவர்களின் வாழ்க்கை ஆனந்தமாய் நகர்ந்தது.

அக்காவின் அறுகம்புற் தோட்டத்தை மேற்பார்வையிட அகலும் தம்பியும் சென்றனர். கிபிர் இரையும் சத்தம்கேட்டு, தம்பியையும், தங்கையும் மண்ணில் தள்ளி அணைத்துக் கொண்டாள். அன்று ஆரம்பமானது அவர்களது இடப்பெயர்வு.

நிலாவின் தோழியின் இறப்புச்செய்தி அவளது காதுக்கு எட்டியது. அவளது மனது விடுதலையை வேண்டி நின்றது. இடப் பெயர்வுகளின் இன்னல்களை ஏற்று நடக்க தொடங்கினர்.

காயப்பட்டவர்களுக்கு உதவச் சென்ற அப்பாவிற்கு குண்டு பட்டு, படுகாயமடைந்தார். இதனால் குடும்பமே நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டு, செய்வதறியாது திகைத்து நின்றனர்.

சில இரவுகள் ஓடின. ஒருநாள் காலையில் வழக்கம் போல் அகல் எழுந்த போது நிலா வீட்டில் இல்லாததை உணர்ந்தாள். அவள், நாட்டிற்கான பணியைச் செய்ய சென்று விட்டாள். குட்டித்தம்பியும் நிலாவைத் தேடி அழுதான். அகல் அவனை அணைத்துக் கொண்டாள். இறுதியாக முள்ளிவாய்க்கால் நோக்கிய நடைபயணம் ஆரம்பமானது.

போகும் வழியில் விழுந்த குண்டுகளைக் கூடப் பொருட்படுத்தாமல் அகலின் கைகளைப் பற்றியபடி நடந்து கொண்டேயிருந்தான் தம்பி. முள்ளிவாய்க்காலை அடையவும், அப்பாவின் இறப்பு செய்தி வரவும் சரியாக இருந்தது.

தம்பி அகலைப் பார்த்தான்.

“அக்கா இனி அப்பா வரமாட்டாரா? யார் எங்களுக்கு எல்லாம் வாங்கித் தருவினம்? அப்பா எழும்புங்க அப்பா!!!”

அவன் கதறியழுத வார்த்தைகள் நெஞ்சை கூறு போட்டன.

இடப்பெயர்வின் வலிகளோடு அங்கும் இங்கும் என ஓடிக் கொண்டிருந்தது முள்ளிவாய்க்கால் வாழ்க்கை.. சோகமாக இடப்பெயர்வில் நடந்து கொண்டிருந்தவள் காலில் ஏதோ தட்டுப்பட, குனிந்து பார்த்தாள். அது தலை இல்லாத ஒரு சடலம்.. வேகமாக பின்வாங்கி இரண்டடி தள்ளி கீழே விழுந்தாள் அகல். அங்கே கிடந்தது ஒரு கை.

எறிகணை(ஷெல்) இரையும் சத்தம் கேட்க அம்மாவையும், தம்பியையும் பிடித்துக் கொண்டு, காலில் குருதி வழிந்தோட, சடலங்களைத் தாண்டி வேகமாக நடக்க தொடங்கினர். உணவுக்கு பஞ்சமிருந்தாலும், கதறலுக்கு பஞ்சமிருக்கவில்லை.

மலர்ந்த ஈழத்தில் மீண்டும் தங்கள் வீட்டில் மழையில் நிலாவும், அகலும், தம்பியும் ஆடிக் கொண்டிருந்தனர். ஒரு கை அகலைத் தட்டி எழுப்பியது. அப்போது தான் அகல் உணர்கின்றாள், அது அவள் கண்ட கனவுகளில் ஒன்று என்று. குட்டித்தம்பி வளர்ந்து விட்டான். ஆனால் அகல் 2009 இலேயே நின்று விட்டாள். இன்றும் நிலா வீடு திரும்பவில்லை. செல்லும் இடமெல்லாம் அக்காவை இன்றும் தேடிக் கொண்டேயிருக்கிறாள் அகல்.

பன்னிரெண்டு வருடங்கள் கனவாகி விடாதோ?. அந்த ஒருநாள் கனவில் கண்டது உண்மையாகி விடாதோ?. அந்த ஒருநாள் கனவில் கண்டது உண்மையாகி விடாதோ? என்று ஏங்கியே வாழ்கிறாள். இன்று வரை அகலின் வாழ்க்கை நகர்கிறது..

– எழில்மதி –






# மூச்சுள்ளவரை தொடர்வோம்

முப்பத்தைந்து வருட கால எமது இனத்தின் விடுதலைக்கான போர் 2009ம் ஆண்டு மே18 உடன் மௌனிக்கப்பட்டது.

உலகத்தின் மூத்த இனம் தனது இருப்பை இழந்து நிர்கதியாக நின்றது. அசைக்க முடியாப் பெரும் தலைவனின் கீழ் ஒன்றுபட்டு, ஓரணியாய், பொங்கு தமிழனாய் திரண்ட எம் இனம் நாதியற்று வீதியோரம் அலைந்தது.

முள்ளிவாய்க்கால் பேரவலம்......... நினைக்கும் போதே சப்த நாடிகளும் ஒடுங்கி ஓலமிடுகின்றன. எமைக் காத்து எமக்கு அடைக்கலம் தந்த வன்னி மண்ணின் மூலை முடுக்கெங்கிலும் பேரவலம் குடிகொண்டது. தமிழனுக்கென்று ஒரு நாடு உருவாவதை சிங்கள பேரினவாதம் தொடக்கம் சர்வதேச வல்லாதிக்க நாடுகள் வரை எவையுமே அங்கீகரிக்கவில்லை.

மாறாக அது தமக்கு பெரும் அச்சுறுத்தலாகவே எண்ணினார்கள். அதற்காகப் பெரும்படை திரட்டி எம் இனத்தின் அசைக்க முடியா இருப்பைச் சிதைத்தார்கள். இரத்தத்தாலும்,-தசைகளாலும் அளப்பெரும் தியாகங்களாலும் உருப்பெற்று நிமிர்ந்து நின்ற எம் ஈழம் சுக்கு நூறாக உடைக்கப்பட்டது.

எங்கும் மரண ஓலம். கொத்துக் கொத்தாய், எறிகணை வீச்சிலும், விமானத்தாக்குதலிலும், கொல்லப்பட்ட எம் உறவுகள் உயிரைக் காப்பதற்காக, அங்கும் இங்கும் ஓடிப்பதுங்கி, ஒதுங்கி, ஒளித்து இடைநடுவில் உயிரை விட்ட எத்தனை உறவுகள். தாய் இருக்கப் பிள்ளை இல்லை, கணவன் இருக்க மனைவி இல்லை. பிள்ளைகள் அத்தனையையும் பறி கொடுத்து விட்டு தன்னந் தனியனாய் பித்துப் பிடித்து அலைகின்ற தாய் தந்தை எத்தனை பேர், யாரோ ஒருவரின் தயவில் வாழ வேண்டிய வயோதிபக் காலத்தில் தாய் தந்தையை இழந்து தவிக்கும் சிறுசுகளைச் சுமக்கும் வயதானவர்கள் எத்தனை பேர்? மண்மானம் காக்கவென இளம் பராயக் கனவுகளை தம்முன்ளே புதைத்து விட்டு மண்ணுக்காய், மாண்டவர்கள் எத்தனைபேர்?. இத்தனையும் மறக்கப்பட முடியாதவை. மறக்கப்பட கூடாதவை. இவ் அவலநிலை தன்னை நினைக்கும் போது, எம் மனம் எழுச்சி கொள்ளட்டும். எம் வரலாறு அழிக்கப்பட முடியாதது. எம் இனத்தின் இளம் தலை முறைக்கு இவை கடத்தப்பட வேண்டும்.

”தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா”

என்ற கோஷம் எல்லார் மனங்களிலும் ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆண்ட எம் தமிழினம் மீண்டும் ஆளும் என்ற உறுதியுடன் பயணிப்போம். முள்ளிவாய்க்காலில் விதையாகிப் போன பல்லாயிரக் கணக்கான எம்மவர்களின் மூச்சுக் காற்று எமக்குபலம் சேரக்கட்டும். எம்மை வழிநடத்தட்டும். விடியலுக்காய் காத்திருப்போம்.

- செந்தழல் -




## மீண்டும் வருவோம்
## மீண்டு வருவோம்

சோலை நடுவிலே பூக்கள் பூத்த
எங்களின் முல்லை முற்றமே
முட்களாய் மனித எலும்புகளை
இன்று சுமக்கின்ற சுற்றமே

எங்களின் வீரவித்துக்களையும்
உன்னில் தான் விதைத்து வந்தோம்
தமிழீழத்தின் இறுதி மூச்சையும்
உன்னில் தான் விட்டுவந்தோம்

அன்னையே!
விடைதெரியாக் கேள்வியா நீ?
எறிகுண்டுகளால் வெடித்த வேள்வியா நீ?
இல்லையேன்
எதிரிகளைச் சுமக்கின்ற போலியா நீ?



சிங்களப் பதாகைகள் உன்னை
ஆணியாய் குத்துகின்றனவா?
சிங்கள ராணுவத்தின் கால்த்தடங்கள்
உன்னை
சாட்டையாய் அடிக்கின்றனவா?

மனிதப் பிணங்களை நீ
சுமந்தாய் அன்று
எம்மவர் குருதியை அமிலமாய்
குடித்தாய் அன்று

வீசுகின்ற தென்றலும் - மரம்
ஆடுகின்ற சலசலப்பும் இன்றும்
ஒலிக்கின்றன எங்களின்
கதறல்களை

வெறி கொண்டவர்கள் அரங்கேற்றிய
அநீதிகள் உன்னை நாடகமேடையாய்
உலகத்தவர் வேடிக்கை பார்கச்செய்தது.

நடந்தேறியவை நாடகமும்மல்ல
நீ மேடையும் அல்ல
தன் பிள்ளைகளை பிணங்களாய்
மடிசுமந்த அவலத்தாயம்மா நீ!

எரிந்து விட்டோம் என்று
எண்ணிய இடத்திலிருந்து
சாம்பல் மேட்டிலிருந்து
எழுந்து பறப்போம்

நந்திக்கடல் வற்றாமல் இருக்கட்டும்
வற்றாப்பளை வீதி எமக்காக
காத்திருக்கட்டும்....

மீண்டும் வருவோம்
மீண்டு வருவோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

- வான்மதி




# காத்திருப்பாய் நந்திக்கடலே

நந்திக்கடலே! நீ
நித்தமும் வலி சுமந்தாயோ ?
நீ சுமந்த காற்றிலும்
உன் மடியிலும்
மரணமடைந்த ஆத்மாக்களின்
அழுகுரல் கேட்கிறதா?
தாலாட்டு பாடிய நந்திக்கடலே!
செந்நிறக்குருதி கண்டு
செய்வதறியாது
கலங்கி நின்றாய்?

வருந்தாதே நந்திக்கடலே!
உன் மடியில் வீழ்ந்த
ஆத்மாக்களின்
ஆன்மபலம் எம்முள்
என்றும் விதையாக
முளைவிடும்
இழந்த தேசமும்
ஒரு நாள் எம் கைவசமாகும்.

கூட்டுச்சதியில் எமை
கூண்டோடு அழித்ததாய்
குதூகலகத்தில்
கூப்பாடு போடும் சிங்கள அரசு
அதர்மத்தில் வென்றதை
மறந்தே போனது
யுத்த மரபினை மீறி
கொத்துக் குண்டுடன்
பொஸ்பரஸ் குண்டும்
பாதுகாப்பு வளையத்தில்
தொடர் ஏறிகணை வீச்சென
மண்டியிடா மானத்தமிழனை
மரணத்தில் தள்ளி
எக்காளமிட்டு
சிரித்து பெருமிதம்
கொள்வதேனோ?




அதர்மம் வென்றதாய்
சரித்திரமில்லை
தர்மம் தோற்றது போல
தோற்றம் தரினும்
நிச்சயம் ஒருநாள் வென்றே தீரும்

பௌத்தம் போதிப்பது
அன்பு வழியே ஆனால்இன்று
பௌத்த துறவிகளே
அதர்மத்தின் தூதுவனாய்

மௌனத்தின் போர்வைக்குள்
முடங்கி நாமிருந்தாலும்
தமிழீழ தாகம் தணிந்திடவில்லை

நந்திக்கடலே நாளை
எமக்கான பொழுதொன்று புலரும்
புலரும் பொழுதிலே
மலரும் ஈழமதில்
மகிழ்வாய் ஆன்மாக்களின் குரல்கள்
உன் மடியில்
ஆனந்த கீதம் இசைக்கும் அன்று
நீயும் வலி மறந்து
புன்னகைப்பாய்
அதுவரை காத்திருப்பாய்
நந்திக்கடலே

- அம்முக்குட்டி -




# என் மனது கதறுகிறது

வேறு ஒரு நாட்டிலிருக்கும் தோழி ஒருவர் அனுப்பிய அந்தப்படத்தை திரும்பத் திரும்ப பார்த்தவளுக்கு முடியவில்லை. மனதை பல்வேறு வினாக்களும் வேதனைகளும் ஆக்கிரமிக்க போனை தூர வைத்து விட்டு படுத்திருந்தாலும் இரவு தூக்கம் அவளை அரவணைக்க மறுத்திருந்தது.

காலையில் தூக்கத்திலிருந்து எழுந்தவளுக்கு கண்ணெல்லாம் எரிந்தது. இரவு நீண்ட நேரம் தூக்கமில்லாது தவித்தவள் அதிகாலையில் தான் தூங்கியிருக்க வேண்டும். மனதின் வலி தூக்கத்தை தூர தள்ளி விட அதனாலோ என்னவோ உடலும் வலித்தது.

கண் விழித்ததும் " அது அவனாகத்தான் இருக்குமோ " என்ற எண்ணம் மீண்டும் மனதைக்குடைய ஆரம்பிக்க நேற்றைய தினம் அந்தப் படத்தை அனுப்பிய தன் தோழிக்கு அழைப்பை ஏற்படுத்துகிறாள்.

"அக்கா யாராவது உறுதிப்படுத்தினார்களா?" போனை எடுத்தவுடன் கேட்கிறாள். மறுமுனையில் ஒலித்த அவளது குரலிலிருந்து புரிகிறது. அவளும் தூக்கமில்லாது தவித்திருப்பது. "சிலருக்கு அனுப்பியிருக்கிறன் ஜெகனிடமும் கேட்டன் அவனும் இவன் தான் என சொல்லியிருக்கிறான். மேலும் உறுதிப்படுத்த அனுப்பியிருக்கு" என்கிறாள்.

ஒரு போராளி உறவின் கடைசி நேரம் வீரச்சாவடைந்த வித்துடலின் படம் அது. அவனும் எங்காவது நலமாக இருப்பான் என்று நினைத்திருந்தவர்களுக்கு அந்தப் படம் இன்னும் வேதனையைக்கூட்டியிருந்தது. அந்தத்தோழியும் தன்னுடன் நின்றிருந்த சக தோழிகள் சிலரின் வித்துடல்களை இனங்கண்டு கொண்டிருந்தாள்.

இவளின் கணவனைப்போலவே அவளுடைய கணவனும் கடைசிச்சண்டையுடன் காணாமல் போயிருந்தான். வித்துடல்கள் தாங்கிய படங்களினிடையே தங்கள் துணைகளும் தெரிந்து விடுவார்களோ என்ற பயம் இவர்களை எப்போதும் ஆட்டிப்படைக்கும். அந்த நேரத்தில் தான் முள்ளிவாய்க்காலில் இறந்து போகாமல் ஏன் உயிருடன் வந்தோம் என்கின்ற எண்ணம் கோபமாக மாறும்.

இவர்களைப்போல ஏழு வருடங்களாக தங்கள் துணைகளின் நிலையறியாது ஏக்கத்துடனும் கண்ணீருடனும் ஏனோ தானோ என வாழ்பவர்கள் பலர்.

"எல்லாப்படங்களையும் பார்த்தனிங்களா?" மீண்டும் வினவுகிறாள் அந்தத் தோழி.

" இல்லையக்கா கொஞ்சம் பார்த்தனான் என்னால முடியேல்ல எனக்கு கஸ்ரமாயிருக்கு தொடர்ந்து பார்க்க " சொல்லும் போதே கண்கள் கலங்கி வேதனையில் மனம் விம்முகிறது. அதற்கு அந்தத்தோழியும் " என்னாலும் முடியவில்லை தான் என்ன செய்ய மனதைக்கல்லாக்கிக் கொண்டு பார்த்து அடையாளம் காட்ட வேண்டிய பொறுப்பு எங்கள் எல்லோருக்குமே இருக்கு. எமக்காக வீழ்ந்தவர்கள் அவர்கள். அவர்களுடைய தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் வரலாறுகளும் காணாமலே போகக்கூடாது. இறுதிவரை போராடி வீழ்ந்த எங்கள் உறவுகளை இனங்கண்டு அவர்களுக்குரிய மரியாதையையும் வணக்கத்தையும் கொடுக்க வேண்டியது எமது பொறுப்பு. எமக்கு அடுத்து வாற சந்ததி ஒருபோதும் இவர்களை இனங்காட்ட போவதில்லை. எம்மால் தான் இவர்களை இனங்காட்டி இவர்களின் தியாகங்களை உலகறியச் செய்ய முடியும்." நாட்டுக்காக பல வருடங்கள் உழைத்த அந்தத் தோழி அழுகையுடன் கூறிய அந்த யதார்த்தமான வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காதில் ஒலிக்க "ஆம் எமக்காக வீழ்ந்தவர்களின் தியாகங்கள் இப்படியே மறைந்து போகக் கூடாது" என்ற நினைவுடன் மனதைக்கல்லாக்கிய படி தோழி அனுப்பிய படங்களுடனான அந்த இணைப்பை எடுக்கிறாள். இரண்டு மூன்று படங்களுக்கு பிறகு பார்க்க முடியவில்லை. கரங்கள் நடுங்குகின்றன.

கடவுளே எதிரிக்கு கூட இந்த நிலமை வரக் கூடாது....என மனது கதறுகிறது.........

**- நிலா -**

# வாழ்க்கை

– கலைஅமுதினி –

வாழ்க்கை எனும் புத்தகத்தில்
படிக்கும் பக்கங்கள் ஆயிரம்
முடிவே இல்லாத புத்தகம்
புரட்ட புரட்ட பலகதை
பயிலச் செய்யும் புத்தகம்

எத்தனை மகிழ்வு
எத்தனை துயரம்
எத்தனை ஏமாற்றம்
எத்தனை துரோகம்
எத்தனை வெற்றி
எத்தனை தோல்வி
அத்தனை பக்கங்களும்
திரும்ப திரும்ப வந்து
அனுபவ படிப்பினை தரும்

வாழ்க்கை புத்தகத்தில்
பயின்றிடும் படிப்பு
பல அனுபவம் தந்த போதும்
ஏதோ ஒரு இலக்கினை
தேடி போகும்

வாழ்க்கை எனும் புத்தகத்தில்
முதல்பக்கம் பிறப்பிலும்
கடைசிப்பக்கம் இறப்பிலும் முடியும்

இறப்பு பக்கம் தெரியாமல்
இடைப்பட்ட பக்கங்களில் சிலவற்றில்
வர்ணங்கள் தோன்றும்
வானவில் போல
சிலபக்கங்கள் கறுப்பு

வெள்ளையாகும்
எத்தனை பக்கங்கள்
வாழ்க்கைப் புத்தகத்தில்
எவருக்கும் தெரியாத
சூட்சுமம்
மனிதமற்ற இதயத்தை விடுத்து
மனிதநேயமுள்ளவராய்
வாழ்வோம் வாழ்க்கை புத்தகத்தில்.








# ஆறாத வலி

இறுதிக்கட்டப் போரின்போது ஒவ்வொரு இடமாக மக்களுடன் சேர்ந்து மருத்துவ மனைகளும் இடம் பெயர்ந்தன. அந்த இடப்பெயர் வின் இறுதி இடம் தான் முள்ளிவாய்க்கால்.

பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து அனேக மருத்துவ உபகரணங்களையும் இழந்து வன்னிப்போரின் இறுதி நாட்களிலும் முள்ளிவாய்க்கால் கனிஸ்ர உயர்தர பாடசாலையில் இயங்கிக் கொண்டிருந்த மருத்துவமனை அது.

அங்கு மண் போட்டால் மண் விழாத அளவிற்கு நோயாளிகள் நிறைந்து வழிந்தனர்.

ஆனாலும் அதனை சமாளிக்கும் அளவிற்கு மருத்துவ ஊழியர்களோ, வைத்தியர்களோ. மருந்துகளோ இருக்கவில்லை. பீரங்கி வாயினில் புறா கூண்டினைக் கட்டி குடிபுகுந்து வாழ்வதைப் போலவே மருத்துவமனையின் சூழலும் இருந்தது.

மருத்துவமனையின் அமைதி காணாமல் போயிருந்தது. மக்களின் அலறல் ஒலிகள் காதைப் பிய்த்துக் கொண்டிருந்தன. அந்த சோகத் தணல், பீரங்கி வேட்டுக்களை விட மோசமாக மனதைத் தாக்கியது.

அன்றும் நோயாளிகளை அனுமதிக்கும் பகுதியில் அதிக மக்கள் காயமடைந்து கொண்டு வரப்பட்டுள்ளார்கள். சத்திர சிகிச்சை அறையை விட்டு வெளியில் வருகிருகின்றோம் தறப்பாளினால் போடப்பட்டும், சன்னங்களால் சல்லடையாக்கப்பட்டும் கிடந்த நோயாளர்களை அனுமதிக்கும் பகுதியில் வயது வேறுபாடின்றி கூக்குரல் இடுகின்றனர்கள். ”இங்க வாங்க அம்மாவை பாருங்க, என்ர தம்பியை பாருங்க” இப்படி பல குரல்கள். நடுத்தர வயது மதிக்கத்தக்க தாயொருவர் வயிற்றில் காயத்துடன் குடல்கள் வெளியில் தெரிய போடப்பட்டிருந்தாள். காயமடைந்த பலரையும் தாண்டி அந்த தாயின் நிலமை மோசமாக இருக்கும் என எண்ணியவாறு அங்காங்கே கிடந்த இறந்தவர்களின் உடலையும் தாண்டி அருகில் செல்கின்றோம். இறந்தவர்களின் உடலைக் கூட அகற்ற முடியாத சூழல். வெடியோசைகள் இடைவெளியற்று தொடர்ந்து கொண்டிருந்தன. யாரின் உயிரிற்கும் உத்தரவாதம் இருக்கவில்லை.

காயமடைந்திருந்த அம்மா ‘என்ர பிள்ளை.. பிள்ளை’ என்றே முனகிக்கொண்டிருந்தாள். குருதி அதிகளவு வெளியேறி உடம்பு கண்டி சிவந்திருந்தது. கை கால் குளிர்ந்து நடுங்கியது. மார்பை மறைக்க ஓர் கிழிந்த சட்டையும் உட்பாவாடையும் அணிந்திருந்தாள். கைகளில் மட்டும் ஒரு சிறிய படம் வைத்து இறுகப்பற்றியிருந்தாள். அதை என்னிடம் காட்டி ஏதோ சொல்ல துடித்தாள். முடியவில்லை. உடல் பலம் இழந்திருந்தது. எவ்வளவோ கத்த முயற்சித்தும் குரல் வெளியே ஒலிக்கவில்லை.

அந்த அம்மாவின் குருதியை இரத்த வங்கிக்கு பரிசோதனைக்காக அனுப்பிவிட்டு வேகமானோம். மாமரக் கொப்பொன்றில் சேலைன் பொத்தலைக் தொங்க விட்டு நாளத்திரவங்களை ( IV fluid ) வேகமாக ஏற்றி கொண்டிருக்க மெல்ல மெல்ல அம்மாவும் மீண்டும் உயிர் பெறத் தொடங்கினாள். முனகிக்கொண்டிருந்த அம்மாவிற்கு சற்று உடலில் தென்பு வர ‘தங்கச்சி எனக்கு பக்கத்தில் மூத்த

பிள்ளையின் உடல் சிதறிட்டு என்ர மூன்று வயது பிள்ளையைக்காணவில்லை நான் காயப்பட்டவுடன் ஆரோ என்னை இங்கு கொண்டு வந்திட்டாங்கள்' என அம்மா பல முறை கூறினாள். ஆனாலும் அவளிற்கு ஆறுதல் கூற அங்கு யாரும் இருக்கவில்லை. எல்லோருமே அந்த நிலைமை தான். நின்று கதைக்க முடியவில்லை. உயிருக்கு போராடும் மற்றவர்களை காப்பாற்ற வேண்டியிருந்தது. எல்லா இடங்களிலும் இதே ஓலம் தான்.

அம்மாவை சத்திர சிகிச்சை கூடத்திற்கு கொண்டு செல்ல முனைந்த போது அம்மா வர மறுத்தாள். ஏன்ர பிள்ளை வந்தால் தான் நான் வருவேன் என்று அம்மா கெஞ்சினாள்.

அப்போது சூரியன் உச்சத்தை தொட்டிருக்கவேண்டும். வெட்பம் எம்மை அனுகவேயில்லை. பல நூறு மக்களின் கண்ணீராலும், செங்குருதியாலும் மருத்துவமனை இயங்கிய இடம் நனைந்துகொண்டிருந்தது.

படார் என்ற சத்தத்துடன் விழுந்த எறிகணையால் அந்த இடமே புகை மண்டலமாகியது. கண்களை மூடிக்கொண்டு விழுந்து படுக்கவும் அவகாசம் கிடைக்கவில்லை. இந்த சத்ததுடன் எம்முடன் ஒன்றாக மருத்துவமனையில் வேலை செய்து கொண்டிருந்த சிலர் காயமடைந்தும் நோயாளிகள் பலரும் மீண்டும் காயமடைந்தார்கள்.

நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு மனம் சின்னாபின்னமாகியிருந்தது. வேதனை கோபம் உணர்ச்சிகள் ததும்ப கண்களில் வழிந்த நீரை துடைத்து கொண்டு மீண்டும் எம் கடமைக்குத்தயாரானோம்

அம்மாவின் சேலைன் போத்தலில் இருந்த சேலைனும் நிலத்தில் ஊற்றியது. நிமிர்ந்து பார்த்த போது தான் தெரிந்தது சேலைன் போத்தலும் காயப்பட்டிருந்தது.

நள்ளிரவைத்தாண்டியும் சத்திர சிகிச்சைக்கூடம் இயங்கிக் கொண்டுதான் இருந்தது. இரவைப் பகலாக்கி உறக்கத்தை தொலைத்து உணவு கூட இன்றி அங்கு நின்ற மருத்துவ ஊழியர்கள் மனித நேயத்துடன் தங்களால் இயன்ற வரை உழைத்ததை யாராலும் மறுக்க முடியாது .

ஒரு சிறிது நேர அமைதியின் பின் மீண்டும் மருத்துவமனையில் ஆரவாரம் மரண ஓலங்கள் தொடர்ந்தன. அய்யா அய்யா அது என்ன அநியாயம் ஓர் பெண் விகாரமாய் தலையிலே கைகளை வைத்தபடி அழுதாள். அவள் அருகில் சிறு காயத்துடன் மருத்துவமனை வந்த சிறுவன் அசைவற்று கிடந்தான். இன்னொருவர் இறந்து போன தன் பச்சிளம் பாலகனை மடியில் வைத்து கதறினார். இன்னும் சிலர் சடலங்களிற்கும் காயப்பட்டவர்களிற்கும் இடையில் தமது உறவுகளை தேடினார்கள்.

அம்மாவிற்கு குடலில், ஈரலில், சிறுநீரகத்தில் பாரிய காயங்கள் இருந்தமையால் சத்திர சிகிச்சையின் பின் அவசர சிகிச்சை விடுதிக்கு அனுப்பப்பட்டாள்

இரவோடு இரவாக வந்த செய்தியால் கும் இருட்டிலும் மனம் வெளித்தது. கொடூரமான அந்த வேளையிலும் எங்களிற்கு அந்தச் செய்தி தேனாய் இனித்தது. "ஐ.சி. ஆர்.சி. யின் கப்பல் வருகுதாம்" ஏத்தனையோ நாட்களாக நோயாளரை ஏற்ற வருவதாக சொல்லி இலவு காத்த கிளி போல ஏமாந்த நாட்களைப் போல்தான் 'நாளை வருமோ' என்று மனம் அங்கலாய்த்தது.



மருத்துவமனையில் கூட காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுகொண்டிருந்த போதே மீண்டும் காயமடைந்து இறந்த பரிதாப நிலை எத்தனை கண் முன்னே நடந்தேறியது. அதைவிட மருந்துகளும் முடிவடைந்திருந்தன.

நேரம் அதிகாலை மூன்று மணி மக்கள் சந்தோ சமாக வாழ்ந்த அழகிய கிராமத்தில் தான் அந்த மருத்துவமனையிருந்தது. ஆனாலும் விடியலை கூற சேவல்கள் இருக்கவில்லை. மாறாக வெடி-யோசைகள் தான் நித்திய பூசையாக முழங்கியது

கப்பல் வருகின்றது என்ற செய்தி பரவலடைய நான் முந்தி நீ முந்தி என்று அனுமதியைப்பெறு-வதற்கு முண்டியடித்தார்கள். ஆனாலும் மூன்றுமாத கால இடைவெளியில் வரும் கப்பலில் அவசர நோ யாளர்களை அனுப்புவதற்கே இடம் போதவில்லை மற்றவர்களை எவ்வாறு?.

"அம்மா வயிற்றின் உள்ளுறுப்புக்களில் பாரிய காயம். கட்டாயம் மேலதிக சிசிச்சைக்காக கப்பலில் போக வேண்டும்" என்றோம். முறைத்து-ப்பார்த்த அம்மா இயலாத காயத்துடனும் கட்டிலை விட்டு எழுந்து என்ர பிள்ளை இல்லாம நான் போக மாட்டன் செத்தா பரவாயில்லை என்றாள் திடமாக.

அம்மாவின் முகத்தைப்பார்க்க உள்ளம் நடுங்கி யது. பட்டென நெஞ்சில் வலித்தது பக்கத்தில் இருந்த நோயாளி காலைப்பிடித்து "என் பிள்ளை-க்கு இரண்டு காலிலும் முறிவு அந்த அம்மாவின் இடத்திற்கு என்னை அனுப்புங்கோ" என கெஞ்சினார்.

உண்மையிலேயே அந்த நோயாளிக்கும் மேல திக சிகிச்சை தேவைதான். அதைவிட உயிருக் காக போராடும் பலர் இருக்கிறார்கள். அவர்க-ளிற்கே கப்பலில் இடம் போதாமல் இருந்தமையால் மனங்களைக்கல்லாக்கி ஆறுதல் கூற கூட கால மின்றி அவர்களைக் கடந்து அடுத்த நோயாளி யைப்பார்க்கச் செல்கின்றோம். மருத்துவர்களின் ஒவ்வொரு நிமிடத்திலும் ஒவ்வொரு உயிர்கள் வாழ்ந்துகொண்டிருந்த காலமது.

ஏறிகணைகள், சன்னங்கள் வெடித்துக்கொண்டே இருந்தன. அதற்கு பயந்து பயந்து, பதிந்து, நிமி ர்ந்து படுத்த நாட்களெல்லாம் கடந்து போய் இறுதி நாட்களில் விதியிருந்தால் நடக்கும் என்று அந்த சூழலில் இருந்த பெரும்பாலானவர்களின் மனங்க-ளில் பதிந்திருந்த உண்மையாகியது.

நேரம் காலை ஒன்பது ஆகியது. மருத்துவமனை மேலும் பரபரப்பானது. முள்ளிவாய்க்கால் மருத்துவ-மனையிருந்த இடத்திலிருந்து அம்புலன்ஸ் வண்-டியில் கடற்கரை வரையும் நோயாளர்களை ஏற்றிச் சென்று பின்னர் சிறிய படகு ஒன்றில் ICRC யின் பெரிய கப்பலில் நோயாளர்களை ஏற்றினார்கள். இதற்குள் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்திய

**படு காயமடைந்த உறவுகளை தூக்கிக் கொண்டு போகவும் முடியாமல் அந்த இடத்தில் விட்டு விட்டு தாங்கள் மட்டும் போகவும் முடியாமல் இரத்த உறவுகள் கதறித் துடித்துக் கொண்டிருந்தார்கள்**

நோயாளர்கள் படும் வேதனை சொல்லமுடியாது.

முதலில் படுக்கையாளர்களை ஏற்றினார்கள்.

கப்பல் வந்தது என்று தெரிந்தவுடன் இடைவி டாது தொடர்ந்து கடற்கரையை குறிவைத்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டேயிருந்தது.

கப்பலில் குறைந்த எண்ணிக்கையான நோயாளர்-களை அனுப்பிவைக்க அதைவிட பல மடங்கு காய-மடைந்தவர்கள் கொண்டுவரப்பட்டனர்.

மருத்துவமனை நோக்கி தொடர்சியாக இராணு-வத்தின் எறிகணைத் தாக்குதல்கள் நடை பெற்றுக் கொண்டிருந்தன.

2009 ஏப்பிரல் 29 திகதி மாலை சிறிலங்காவின் கடற்படை மற்றும் தரைப்படையின் கொடூரத்தா க்குதல்கள் முள்ளிவாய்க்கால் கனிஸ்ட உயர்தர வித்தியாலத்தில் தற்காலிகமாக இயங்கிய மருத்துவமனை மீது நடத்தப்பட்டது. பாடசாலை பிரதான கட்டடத்தின் ICU விடுதியாக இயங்கிய மையப்பகுதியிலும் ஒரு எறிகணை விழுந்தது .

இதில் காயமடைந்து மருத்துவ மனையில் இருந்த பல காயமடைந்த மக்கள் மீண்டும் படுகொலை செய்யப்பட்டதுடன் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மக்கள் மீண்டும் காயமடைந்தனர்.

இந்த கொடூரத் தாக்குதலில் இன்னும் பலர் தொகையாக கொல்லப்பட்டு இருப்பார்கள். ஆனால் அன்று காலை ICU விடுதியில் இல் இருந்த பல நோயாளர்கள் நீண்ட நாள் பின்னர் வந்த ICRC கப்பல் மூலம் மேலதிக சிகிச்சைக்கு அனுப்ப-ப்பட்டிருந்தனர். அதனால் தான் இறந்தவர்களின் எண்ணிக்கை ஓரளவு குறைவாகவிருந்தது .

அன்று காலை ICRC பிரதிநிதிகள் மூலம் இங்கு மருத்துவ மனை இயங்குகின்றது என்பதை சிறி



லங்கா அரசிற்கு தெரியப்படுத்திய பின்னர் இத்தாக்குதல் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது

அதன் பின் உயிர்தப்பிய நோயாளர்களுடனும் எஞ்சியிருந்த மருத்துவ உபகரணங்களுடனும் முள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலை இருந்த இடத்திற்கு இடம்மாறுகின்றோம். அங்கே ஒரு ஒற்றைக்கட்டிடம். நாம் அங்கு செல்வதற்கு முன்பே காயமடைந்தவர்களை கொண்டுவரத் தொடங்கியிருந்தார்கள். அங்கேயும் எறிகணை வெடிப்பு பூமி இருளாக இருந்தாலும் சீறிவரும் சின்னங்களும் சிதறி வெடிக்கும் குண்டுகளின் தீப்பிளம்புகளும் பூமியின் இருளை விழுங்கி அச்சமூட்டும்.

மே 14-15-16 இந்த நாட்கள் இதயத்தின் இறுதி நாளமும் அறுக்கப்பட்டதாய் அந்தரித்துப் போனோம் .

காயமடைந்தவர்கள் ஒரு புறம் இறந்தவர்களின் உடல்கள் என வேறுபாடற்று மருத்துவமனை இயங்கிய பாடசாலைவளாகம் முழுவதும் நிறைந்து கிடந்தது.

இறந்தவர்களின் உடல்கள் அகற்றப்படாமல் ஈக்கள் மொய்த்து துர்நாற்றம் வீசத்தொடங்கியது. படுகாயமடைந்தமக்களையும் பிரித்து எடுக்க முடியாமல் உயிரற்ற உடலின் அருகில் கிடந்தே முனகினார்கள்.

நிமிடத்திற்கு நிமிடம் இறப்புகள் கண்முன்னே நடந்து கொண்டிருந்தன. எம்மால் எதுவும் செய்ய முடியவில்லை. ஒரளவு எழுந்து நடக்ககூடியவர்கள் இவ்விடத்தை விட்டுப்போனார்கள்.

முள்ளிவாய்க்கால் அ.த.க பாடசாலையில் இறுதியாக இயங்கிக் கொண்டிருந்த மருத்துவமனையை அண்டிய பகுதிக்கு இராணுவம் வந்து விட உடன் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. உயிரிருந்தும் பிணமாகவே நடந்தோம் நாமும்.

படு காயமடைந்த உறவுகளை தூக்கிக் கொண்டு போகவும் முடியாமல் அந்த இடத்தில் விட்டு விட்டு தாங்கள் மட்டும் போகவும் முடியாமல் இரத்த உறவுகள் கதறித் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கு நடைபெற்ற துயரச்சம்பவங்கள் எண்ணற்றவை. மனித உரிமைகள் மீறப்பட்டிருந்தன. இனப்படுகொலை அரங்கேற்றப்பட்டிருந்தது. அதுவும் மருத்துவமனை மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைக் கூட உலகம் கண்டிக்கவில்லை.

**- மிதயா கானவி -**




# எம் தாய் மண் மீது நாம் உறுதி செய்வோம்..!

எரிந்து போன சாம்பல்களுக்குள்
புதைக்கபட்ட நிஜங்களும்
புதைக்கப்பட்ட கனவுகளும்
புதைக்கப்பட்ட நிதர்சனங்களும்
புதைக்கப்பட்ட தாய் நிலம்
விதவைக் கோலம் கொண்டு
அழிந்து போன அந்த நாள்
மறந்து போகுமா?

தமிழினத்தின் கருவறுத்து
தமிழினத்தின் உரிமைகள்
உடமைகள்
களைந்தெறிந்து
நடைபிணங்களாக
அந்த உயிர்களின்
ஓலமும் அலறலும்
வான்வெளியை பிளந்து
அதிர்ந்த குரல்கள்
காற்றலைகளில் ஓயாது
கேட்டு கொண்டுதான் இருக்கிறது.
எப்படி மறக்கும்??

வீர மறத்திகள் என்பதால்,
சிறகுகள் ஒடிக்கப்பட்டு
சிறைப்படுத்தி நிர்வாணப்படுத்தப்பட்டு
உணர்வுகள் உறைந்து போக
மார்பகங்கள் கோர நகங்களால்
குதறப்பட்டு
உடல்கள் குருதியால் நனைய
உயிர் அணுக்கள் ஒவ்வொன்றும்
வலிகளால் துடிக்க துடிக்க
வன்புணர்வு செய்து சிதைக்கபட்டு
கொல்லப்பட்ட கொடூரத்தின்
தாண்டவத்தை எப்படி தாயே
மறக்க முடியும்??

குற்றுயுராய் பல உறவுகள் துடிக்க
குடும்பதோடு வம்சம் அழிய
பிணங்கள் மேலே ஏறி மிதித்து
முண்டங்களாய் முனகி கிடக்க
ஒன்றாய் கூடி மகிழ்ந்திருந்த
உறவுகள் தனித்து விடப்பட
பாவிகள் நாம்
உயிரற்ற ஜடங்களாகி
பிசாசுகளின் கோரப் பிடியில்
மௌனமாக பின் தொடர்ந்து
முள்வேலிக்குள் முடக்கப்பட்டு
பரிதவித்துக் கிடந்த என் இனத்தை
உலக தேசமே மௌனம் காத்து
அழித்த துயரம் மறந்திடுமா??

நந்திக்கடலில்
கரைந்த உயிர்கள்
உறைந்து போகாது.
அழிந்து போகாத எச்சங்கள்
மாபெரும் சரித்திரங்கள்
சாய்ந்து தூங்கும் இடம்
மாபெரும் தியாகங்கள்
விதைக்கப்பட்ட நிலம்
மாபெரும் இனத்தின் சுவாசங்கள்
சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கும்
புனித ஆலயம்
மாபெரும் கனவை எண்ணங்களை
சுமந்து வாழும் ஈழத்தாய்
என்றும்
எம் தேசம் உயிர்ப்புடன்
துடிப்புடன் தான் இருக்கும்...!

உணர்வற்று கிடப்பதற்கு
நாம் என்ன மாமிசங்களா?
அந்த மாவீரங்களையும்
எம் மக்களையும்
எம் தாய் மடியான
மண்ணை மறந்து
வாழ்வதற்கு

எந்த மனிதமுமற்று இருந்த
உலக தேசங்கள்
எம் பக்க நீதிக்கு மனித நேயத்துடன்
பதில் சொல்லும் வரை
நாம் ஒன்றிணைந்த குரல்களாய்
நிமிர்வுடன் எழும் காலம் இது!

ஒவ்வொரு தமிழனின்
சுவாசமும் திறந்திருக்கும் வரை
சுடராய் நீறுகொண்டிருக்கும்
முள்ளிவாய்க்கால்

ஒரு நாள் வெல்லும் என்பதை
எம் தாய் மண் மீது நாம் உறுதி
செய்வோம்..!

உறுதியுடனும் வலியுடனும்

**-சந்திரிகா-**

18-05-21

# ஈகை கவசம்




அரச பயங்கரவாதமே.!
போரை நேரில்புரி!
போர்வைக்குள் ஒளியாதே.

‘கொரோனா’ போர்வைக்குள்
‘கோட்டா’ அரசு இதை
நாம் சொல்லவில்லை..
உலகம் சொல்கிறது.

நாட்டின் இறைமையை
சிதைக்கிறாய்.!
சனநாயகப் புத்தகத்தை
புரட்டிப்பார்!
நாமும் இந்த நாட்டின்
இறையாண்மையின் பாகமே.!

எமது தேசம் உன்னோடு
போரிட்டது
ஆனால், நீயோ..!
எம்மினத்தை பலியிட்டாய்!

அதிகார வேட்கை அன்று
உன் கண்களை
மறைத்திருந்தது
இன்றும் மறைத்திருக்கிறது!

அன்று வல்லரசுகளின்
சிறகுகளுக்குள் நீ!
இன்றோ சீனத்தின்
காலடிகளில்
உன் வாள்..!
வீழ்ந்தது நீயா.! நாங்களா!




பல்கலையில் தூபியை
இடித்தாய்.
எமது அகவழிபாட்டின்
ஆலயம் அது
உளம் நொருங்கிய போதும்
உறுதி குலைந்தோமா!

முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை
நள்ளிரவில் கபளிகரம்
செய்கிறாய்
எமது இனத்தை மீண்டும்
இரத்தக் குளியல் செய்யும்
உன் மூர்க்கத்தின்
பிரதிபலிப்பு இல்லையா இது..!

ஈகை கவசம் அது
இனத்தின் ஆற்றல்
உன்னை எங்கே
நிறுத்தி வைத்திருக்கிறது..?
புரிகிறதா இப்போது..!

சீனத்தின் செங்கொடியின் கீழ் நீ !
உனக்கெதற்கு
செங்கோல்!
உனக்கெதற்கு
செங்கோல்..!

உனது எறிகணை
தீப்பிழம்புகளில்
எமது இனத்தின்
உயிர்கள் கருகின
உடல்கள் குருதிச் சேற்றில்
புதைந்தன..
இதை நினைவுறுத்தும்
எமது கோயில்கள்,
உன்னை உறுத்துகின்றனவா!

இந்த உறுத்தல்கள்..
நீ விதைத்தவற்றின்
அறுவடை..
இனி நீ..
அழியும் பொழுதே..
இவை ஒழியும்
அன்றேல்
உலக வரலாறு உள்ளவரை
உன்னை பின்தொடரும்!!

**நிலமகள்**

# மூச்சிலே கலந்தவர்



கொத்துக் கொத்தாக
கொலையுண்டு போனோம்!
வித்தாக எம்மண்ணில்
விதையுண்டு போனோம்!
வல்லவரெல்லாம் வந்தெமக்குதவும்
முழுதாய் நம்பினோம்!
திக்கெட்டுத் திசையெங்கும்
கரங்களை நீட்டினோம்!
கூவினோம்!.. குழறினோம்!!
எப்படியாவது எமதினம் மீளும்
உலக நாடுகள் உதவிக்கு வருமென
உண்மையாய் நம்பினோம்.
அத்துணை ஏக்கமும்
பொய்த்துப் போனது
மனிதம் ஈழத்தில்
மாண்டு போனது!!!!!

மூத்த குடியை
முழுமையாய் அழிக்க
எறிகணை ஏவினான்
சிங்கள புலைஞன்.
கந்தகம்.. அமிலம்..
காற்றிடை கலந்த
கொடிய விசம் – என
குண்டுகள் பொழிந்தான்
கணக்கிலா வழிகளில்
கொன்றான்!. தின்றான்!.
கெக்கெலி கொட்டி
கோரமாய் நகைத்தான்.

மனித உரிமைகள்
பேசவும் பேணவும்
கணக்கில்லா நாடுகள்.
மனித நேயம் மாண்டு போனதை
கைகட்டி நின்று வேடிக்கை
பார்த்தன.
எல்லாம் முடிந்தபின்
'அடுக்குமோ?' என்றனர்

‘அய்யோ உயிர்கள்
அநியாயம் ஆனது
பாவம் நீங்கள்..
புகலிடம் கிடைக்கும்...
பயப்பட வேண்டாம்’
பரிந்துரை கூட
பதனமாய் செய்தனர்.

பிஞ்சுக் குழந்தைகள்
பச்சிளம் பாலகர்
பருவத்திலுள்ளோர்
பீதியில் உறைந்தோர்
மூத்தோர் முதியோர்
முகவரி தொலைத்தோர்
தேசியத்தின் பால்
தேயாத காதலால்
நாட்டின் நலனே
மூச்சாகிக் கொண்டோர்
கொல்லப்படுவதற்கு
வயதெல்லை இல்லை.
அங்கம் சிதறினர்
செந்நீர்க் குழம்பை
தேசத்தில் சிந்தினர்
பசியால் வாடி பரிதவித்திறந்தார்.
கொத்துக் கொத்தாக
கொலையுண்டு போனார்
வித்தாக இங்கே
விதையுண்டு போனார்..

இன அழிப்பிற்கிங்கே
காரணம் ஒன்றே!
தமிழராய் பிறந்தோம்!!
தலை நிமிர்ந்திருந்தோம்!!

எங்களின் ஓலம்..
உங்களின் செவிப்பறை
கிழியக் கேட்டதா?
பிணவாடையோடு
புகைவாடை எழுந்து
கடல் கடந்துங்கள்
கண்களைக் கரித்ததா?
விந்தைகள் செய்த
விளைநில பூமி
கந்தகம் தோய்ந்து
கருகுண்டு போனதா?




இறந்தவர் எண்ணிக்கை
இலட்சங்கள் தொட்டது..
பருவங்கள் கடந்து
பன்னிரெண்டானது
தோண்டத் தோண்ட
புதைகுழி வரலாம்..
புலம்பெயர் தேசத்தில்
பனியிடை விழலாம்
இறப்பு என்பது வலிதரும் பாடம்
தேசம் என்பது ஆன்மாவின் இருப்பு!!
இருப்பு என்பதோ
உணர்விடை கலந்தது.

ஆண்டுகள் இரண்டு ஆயிரம் கடந்தும்
இஸ்ரேல் எழுந்தது.
மாண்டவர் விதைகளாய் வீழ்ந்தவர்
வாக்குகள் பொய்த்துப் போகுமோ?
உயிர்ப்போம்!
இணைவோம்!!
ஒன்றாய் எழுவோம்!!!

உறுதி!! இது உறுதி!!!

– தாய்மொழி –

# வீரமன்று விதியன்று

“ம்....மா!....ம்...மா.....!...ம்...மா...”

இடைவிடாமல் நாலாபுறமும் கேட்டுக்கொண்டிருந்த வெடிச்சத்தங்கள், குண்டுகளின் அதிர்வுகள், கூவிப் பறந்த எறிகணைகளின் ஊய்ங்காரம் என, இவற்றின் நடுவே இது -

ஒரு குழந்தையின் வீரிட்ட அழுகை.

நடந்து கொண்டிருப்பது ஒரு கொடிய போர் என்பதை உணரமுடியாத – பசித்தால் அழ மட்டுமே தெரிந்த - ஒரு எட்டு மாதக் குழந்தை அது.

சற்றுத்தூரத்தில், இரத்தம் வழிந்தோடிக்கொண்டிருக்க வீழ்ந்து கிடக்கிறாள் அதன் தாய்.

கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிரிந்து கொண்டிருந்த அவளுடைய உயிரை உலுக்கி உருக வைக்கிறது அந்த அழுகை. பசியால் கத்திக் கொண்டிருக்கும் குழந்தையின் நினைப்பில் துடிக்கிறாள்.

காயம் கொடுத்த வலியைவிடப் பல மடங்கு வலியை அந்த நினைப்பு கொடுக்கிறது.

”ஒரு மார்பில் தானே காயம்.....மறுபக்கத்தினால் பால் கொடுக்கலாம்”

நிலத்தோடு உராய்ந்து.....இழுத்து...... மேலும் உராய்ந்து....சிரமப்பட்டு உடலை நகர்த்திக் குழந்தையினருகில் போய், மெது மெதுவாக அதை இழுத்துத் தன்னோடு அணைத்துப் பசியாற்றித் தலைதடவ, அழுகை ஓய்கிறது. கூடவே அன்னையவள் உயிரும்.

எறிகணைச் சிதறலில் வெட்டுண்ட மார்பிலிருந்து இரத்தம் வழிந்தோடிய நிலையில் உயிர் பிரிந்த தாய்.....

அம்மா இறந்து போனதை அறியாமல் மறுபக்க மார்பைச் சுவைத்து அழுகை ஓய்ந்த குழந்தை.....

விதிகளை மீறி நடந்த போரொன்றின் சாட்சிகளாக ஈழ மண்ணில் அன்று.

எறிகணைகள், கொத்துக்குண்டுகள். விமானக் குண்டுகள், நச்சு வாயுக்குண்டுகள்.... மூச்சை இறுக்கிய கந்தக நெடி....செவிகளைப் பிளந்த வெடியதிர்வுகள்....

கண்களை மறைத்த புகை மண்டலங்களின் நடுவே குதறி ஏறியப்பட்ட உடலங்கள். உயிர் பிரிதலின் இறுதி நேர உபாதைகள், பிரசவித்த வலியின் முனகல்கள்.....

”தண்ணீ...!.. தண்ணீ....! ஐயோ....! தண்ணீ...!” என வெவ்வேறு திசைகளிலிருந்தும் ஒலித்த மரண தாகத்தின் மன்றாடுதல்கள்....

குப்புறக்கிடந்து மெது மெதுவாகத் தலை நிமிர்த்திப் பார்க்கிறார்கள்.. அம்மாவும் மகளும். அவர்களுக்குக் காயம் எதுவும் இல்லை.

” அப்பா எங்கையம்மா?”

” ஷெல் வரேக்கை விழுந்து படுத்தவர்...நான் கண்டனான்...பார் பிள்ளை.....”

”அப்பா...!.....அப்பா......!ஜி


புகை கொஞ்சம் விலக, சுற்றிவரத் தேடுகிறார்கள். அவரைக் காணவில்லை.

”தண்...ணீ....த்....தண்ணீ..! பி.....ள்.....ளை........”

”ஐயோ! இது அப்பான்ரை குரலம்மா.. ஐயோ.... அப்பா.....! எங்கையப்பா இருக்கிறீயள்...?”

குரல் வந்த இடம் நோக்கி ஓடுகிறார்கள். அங்கே-இடுப்புக்குக்கீழ் உடலின் பாகங்கள் சிதைந்த நிலையில் அப்பா உயிர் பிரிந்திருந்தார்.

”ஐயோ...! என்ரை தெய்வமே! என்ரை ராசா! ஐயோ!”



"என்ரை அப்பா.....அப்போ ..ய்!"

வான் தொட்டுக் கரைந்தன அந்தக் கதறல்கள். வல்லாதிக்கக் கரங்களைப் பற்றிக் கொண்டு நின்ற பகைவன், "வெற்றி" என்று சிரித்தான்.

"நினைத்தபடி முடித்து விட்டேன்." என்ற இறுமாப்பின் சிரிப்பு!

ஆனந்தபுரம்

பகைவனுக்கெதிரான வியூகம் ஒன்று.

விடுதலை தாகத்தால் உலகையே அளந்து நின்ற சிறிய படையணியின் இறுதி முயற்சி.

விவேகம் திட்டமிட, வீரம் அணிவகுத்தது. அதி-உயர் ராணுவ நுட்பத்தின் சாறு பிழிந்து வடிவமைக்கப்பட்டு - எதிரியை நிலை குலையச் செய்யக்கூடிய ஒப்பற்ற போர் வியூகம் அது.

நம்பிக்கையோடு களம் புகுந்தார்கள்.

ஆனால்.....ஆனால்... இதென்ன...?

வெற்றியை நம்பியிருந்த வீரர்களைச் சுற்றி நச்சு வாயு! உடலைச் சுருக்கி, உணர்வை மயக்கி மரணத்துள் தள்ளிய, தடை செய்யப்பட்ட இரசாயனக் குண்டுகள்!

ஒருவர் பின் ஒருவராகச் சாய்ந்து மயங்கி உயிர் பிரிகிறார்கள் அத்தனை தளபதிகளும் வீரர்களும்.

மனித குலத்துக்கே முதல் மொழி தந்த இனத்தின் கடைசி நம்பிக்கையையும் பகைவனுடைய விதி மீறிய கயமை உடைத்தெறிந்தது அன்று.

இறுதிக்கட்டம்

"எங்களுடைய ஆயுதங்கள் மௌனிக்கின்றன! நாங்கள் சரணடைகின்றோம்"

உயர்த்திப் பிடித்த வெள்ளைக் கொடிகளுடன் புலித்தேவனும் நடேசனும் பகைவனுடைய பாசறை நோக்கி நடக்கிறார்கள்.

பகைவன் எகத்தாளமாகச் சிரிக்கிறான். மீண்டும் ஒரு முறை விதி உடைக்கப்படுகிறது.

சமாதானம் வேண்டி சரணடைந்தவர்கள் மீது சரமாரியாய்ப் பாய்கின்றன துப்பாக்கி வேட்டுக்கள்!

குப்புறச் சாய்ந்தவர்கள் பிறந்த மண்ணை முத்தமிட, வெள்ளைக் கொடிகள் சிவப்பாகின்றன!!

பாரதப் போர் முடிந்து விட்டது.

அடர்ந்த காடொன்றில் அன்றொருநாள் கிருஷ்ண பரமாத்மா தியானத்தில் ஆழ்ந்திருக்கின்றார். இலைகளடர்ந்த மரமொன்றின் கிளை மீது உட்கார்ந்திருந்தவருடைய கால்கள் அவ்வப்போது அசைந்தபடி இருக்கின்றன.

தூரத்தில் ஒரு வேடன். காட்டுக்குள் வேட்டையாட வந்தவன்,நாலா புறமும் கண்களை ஓடவிட்டவனுக்கு, அவ்வப்போது அசைந்தபடி இருந்த கிருஷ்ணருடைய கால்கள் தெரிகின்றன. இலைகளினூடாகத் தெரிந்த கால்கள் அவனுக்குப் பறவையின் அசைவு போன்றதொரு தவறான கணிப்பைத், தோற்றுவிக்க, பறவை பறந்து விட முன் அம்பெய்து விடும் முனைப்பில் உஷாராகிறான். மறுகணம் சீறிப் பாய்கிறது அம்பு.

இலக்கு தவறவில்லை!

பறவை வீழ்ந்திருக்கும் என்றெண்ணி, அந்த இடம் நோக்கி ஓடிய வேடனுக்கு அதிர்ச்சி காத்திருக்கிறது.

செந்தாமரையொத்த பாதமொன்றில் குத்திட்டு நிற்கிறது அவனெய்த அம்பு. பாதத்தை பறவை என்றெண்ணிய தன் தவறுக்கு வருந்தி நிமிர்கிறான். மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது மனித உருவிலான ஒரு தெய்வ வடிவம்!

வேடன் பதறிப் போகிறான்.

"ஐயையோ..சாமி...! என்னை மன்னித்து விடுங்கள். நான் தவறு செய்து விட்டேன். இதோ அந்த அம்பை இழுத்து விடுகிறேன்."

கூறியவன் கதறி அழுகிறான்.

வேடனுடைய முகத்தை கூர்ந்து பார்த்த கிருஷ்ண பரமாத்மாவுக்கு அங்கே ஒரு நிழலுருவம் தெரிகிறது.

வாலி!!

இராம அவதாரத்தின் போது இராமனாய், மறைந்திருந்து (விதி மீறி) அம்பெய்தித் தன்னால் கொல்லப்பட்ட வாலி!

உயிர் பிரிதலின் இறுதி தருணங்களில் நின்று, இராமனைப் பார்த்து, அன்று வாலி உதிர்த்த, வலியும், வேதனை நிரம்பிய வார்த்தைகள் -

யுகங்கள் பல கடந்துவிட்ட நிலையிலும் இன்று... இதோ.. இந்த மகா பாரதக் கண்ணனுக்குள் எதிரொலி செய்கின்றன.

"வீரமன்று.. விதியன்று.. மெய்ம்மையின் வாரம் அன்று.. நின் மண்ணினுக்கு என் உடல் பாரம் அன்று.. பகை அன்று. பண்பழிந்து

ஈரமின்றி இது என் செய்தவாறு அரோ..."

"வேண்டாம்! அம்பை இழுக்காதே! இது - அன்று உனக்கு நான் எய்த அம்பு. இன்றுதான் திரும்பியிருக்கிறது."

இப்படி சொல்லிக் கொண்டு சாவில் கலந்து விட்ட அந்த வடிவத்தை வியப்புடன் பார்த்த வேடனின் (வாலி) கண்களினூடாக, அன்று மறைந்திருந்து விதி மீறித் தன் மீது அம்பெய்திக்கொன்ற இராமனுடைய முகம் தெளிவாகத் தெரிகிறது.

**-அஜந்தி-**




# நேசம் நிறைந்த அப்பா

நேசம் நிறைந்த அப்பா.
உங்கள் செல்லமகள்.
நாங்கள் நலமென்று ஒப்புக்கு சொல்ல
சித்தமில்லை அப்பா! ஏதோ இருக்கிறோம்.
நீங்கள் நலமா??

குடும்பத்தின் நினைவுகளை சுமந்தபடி
தாயகம் மீட்கும் களத்தில்
நிற்கிறேன்
மகளே என்பீர்களே......

அந்த தாய்த்தேசக் கனவுகள்
நலமா அப்பா?
தோள்களில் துவக்கேந்தி
நிற்கும் தருணங்களிலெல்லாம்
மடியில் உன்னை மகிழ்ந்து சுமந்த
கணங்களை நினைத்துக்
கொள்வேன் மகளே
என்பீர்களே
அந்த துணிவுடமை
நலமா?

சுதந்திர தாகத்தை ஊட்டும் விடுதலை
உணர்வுகளை ஒரு போதும் துரோங்கள்
வென்று விடாது மகளே



என்பீர்களே அந்த
துணிவுடமை நலமா?

உயிரைவிட மேலானது
பனை தேசத்தின் பந்தம்
என்பீர்களே
காலம் ஒருநாள் கை
கூடும் மகளே
நம் காந்தள்மலர் தேசத்தின்
விடுதலைக் கீதம்
உலகெங்கிலும் ஒலிக்கும்
என களிப்படைவீர்களே
அந்த கனவுகள் நலமா?

பெருமை நிறைந்த எங்கள் அப்பா.!!
உங்கள் பிரிவின் ஆற்றாமை
எங்களுக்கு பெருந்துயரை தருகிறது.
ஆனாலும் அதில் எனக்கு
பெருமையும் இருக்கிறது!

தாய் வயிற்றில் நான்
இருந்த போதே
தாங்கள் தாயகம் மீட்கும்
பணியில் களத்தில்
இருந்தாக பின்னாளில்
அறிந்தேன் அப்பா.
இனவாதத்தால் அடக்கப்பட்ட
இனமொன்றின் விடுதலைக்காய்
தளவாடம்
சுமந்ததெல்லாம்
பிறிதொரு நாளொன்றில்
தெரிந்து
பெருமிதம் கொண்டேன்
அப்பா!

பெரியப்பாவின் சொல்லே
வேதமாய், அவர்
ஊட்டிய விடுதலை அறமே
தத்துவமாய் சிரமேற்கொண்டு
நீங்கள் செயலாற்றியதை
அவ்வப்போது
அம்மா எனக்கு உரைப்பதுண்டு.

அன்பே வடிவான அப்பா
என் பெரியப்பா நலமா
அவரது பெயர் போல,
அவரின் பெருமை போல
இந்த பிரபஞ்சத்தில்
நானறிந்த பெரு வியப்பு
ஏதுமில்லை.
அவருக்கு துணைநின்ற
உங்களின் மகளென்பதில்
எனக்கு மட்டற்ற
மகிழ்ச்சி அப்பா!!

பெரியப்பாவின் பெயர்
சொன்னால் புல்லும்
துவக்கேந்தும்
புழுவும் வாளேந்தும்
எறும்பும் யானையை தூக்கும்
ஈயும் இடியை உரசும்
உலகறிந்த இப்
பேருண்மையை
உங்கள் மகளும்
அறிவேன் அப்பா.

கனிவான அப்பா!!
உங்களுக்கொன்று
தெரியுமா?
தந்தையை பிரிந்த
அல்லது இழந்த
பிள்ளைகளின் நாட்கள்
மகிழ்ச்சி நிறைந்ததாய்
உலகில் ஒரு போதும்
இருந்தது இல்லை.
உங்கள் முகம் காண
ஏங்கி தவிக்கிறேன்
அப்பா

நெடுங்காலம் ஆச்சுதப்பா
நீங்கள் வீடு திரும்பி
உங்கள் பாதம் பதியாத
நம் வீடு



பாழ்பட்டு வெறுமையாய்
கிடப்பதை உணர்கிறோம்
அப்பா!!

போர்க்களத்திலிருந்து
நீங்கள் வீடு திரும்பும் பொழுதுகள்
எத்தனை அழகானவை......
எங்களோடு இல்லத்தில்
நீங்கள் இருக்கும்
இரண்டொரு நாட்களே
என் பிள்ளைப் பிராயத்தின் வசந்தப்
பொழுதுகள்.

எங்களோடு நீங்கள் செலவிட்ட அந்தக்
கணப்பொழுதுகள்....
இமயத்தின் உச்சியை விட
உயர்வானவை.
உலகத்தின் மொத்த மகிழ்வில்
உன்னதமானவை.

வாஞ்சை மிகுந்த
உங்களின் வார்த்தைகளை விட
தெய்வங்களின் வரங்கள்
ஒன்றும் மேலானவை அல்ல
பரிவு நிறைந்த உங்கள்
பாச முத்தங்களை விட
அருள்பாலிக்கும் கடவுள்களின் காட்சி

ஆனந்தமானது அல்ல
நீங்கள் எங்களோடு
செலவிட்ட அந்த சொற்ப
பொழுதுகள் மீண்டும்
வாய்க்குமா அப்பா
எனது வாழ்நாளில்
உங்கள் முகம் பார்த்த
அந்த சில பொழுதுகளே
என் உலகின்
ஆகப் பெரிய அர்த்தமாக
உணர்கிறேன் அப்பா

நீங்கள் சொன்ன நீதிக் கதைகளும்
நீங்கள் கற்றுத் தந்த அறநெறிகளும்
நீங்கள் ஊட்டிவிட்ட
தாயகப்பற்றும்
வஞ்சகத்தை எதிர்
கொள்ளும் நேர்மை
திறனுமே
இன்னும் எங்களை
வழி நடத்துகின்றன
அப்பா!!
எங்கே இருக்கீறீர்கள்
அப்பா?
நீங்கள் இருக்கும் இடம்
தெரியாமல்
நிம்மதியற்றுக் கிடக்கிறோம் அப்பா

கடந்த காலங்களில் நீங்கள்
வீடு வரும் நாளில்
அன்றைய விடியல்
மேலும் வெளிச்சமாகும்
வீடும் சொர்க்கமாகும்
அம்மாவின் முகத்தில்
மகிழ்ச்சி மலர்கள்
பூக்கும்
இல்லமெங்கும்
ஆனந்தம் பரவும்
வாசல் வரும் தென்றல்
எங்கள் வீட்டில்
ஓய்வெடுத்துச் செல்லும்.

ஆனால், நீங்கள் இல்லாத
இவ் வாழ்வில்
அவையெல்லாம்
நிராகரிக்கப்பட்டு விட்டன
அப்பா!
உங்கள் வருகை அற்றுப்
போனதால்



இதயம் இறுகிக் கிடக்கிறோம்
கசப்பு நிறைந்த வருடங்களை
கடக்கப் பழகி விட்டதால்
கனிகளோ, காலமோ
இனிப்பதில்லை
இப்பொழுதெல்லாம்
தென்றல் வாசலுக்கே
வருவதில்லை
எங்கள் வானம் பாடிகள்
ஊமையாகி விட்டன
வானவில் கூட நிறமற்று
கிடக்கிறது
அம்மாவின் புன்னகை
எல்லாம்
உப்புக் கண்ணீராய்
கரைந்து போயிற்று!

இருந்தாலும் இவற்றை நாங்கள்
பழகிக் கொண்டோம்.
ஈழநிலத்தில் என் போன்ற
ஆயிரமாயிரம் பிள்ளைகள்
உங்கள் பிரிவு வலிகளைத் தந்தாலும்
அதிலும் ஒரு பொருள்
இருப்பதை உணர்கிறோம்
அப்பா!

புல்லுக்கும் புழுவுக்கும்
கூட இந்த பூமியில்
இடமுண்டு

பறவைக்கும்
பட்டுப் பூச்சிக்கும்
வாழ்வதற்கு கூடு உண்டு
எல்லோருக்கும் வாழ்வதற்கு இடமிருக்கும்
இவ்வுலகில்
தமிழனுக்கென்றொரு
நாடில்லையே அப்பா!!!

தமிழீழம் எங்கள் தாய்
நிலமல்லவா?
நீங்கள் இரத்தம் சிந்திய
புண்ணிய பூமி அல்லவா?
நம் பூர்விக மண்ணை
நாம் அடைவதற்கு
இத்தனை விலைகளா?
இத்தனை தடைகளா?

அப்பா!!!
எங்களது சுதந்திர காற்றில் மட்டும்
ஏன் உலகம் நஞ்சைக்
கலக்கிறது?
நம்மண்ணை நாம் ஆள
வேண்டும்
அப்பா அதற்காகத்தான்
நீங்கள்
களத்தில் நின்றீர்கள்
அதற்காகத்தான்
நீங்கள் காலத்தில்
கரைந்தோ
காணாமல் போயோ
உள்ளீர்கள்
இந்தப் பிரிவின் வலியை
எம் மண்ணுக்காக ஏற்றுக்
கொள்கிறோம்
தந்தையற்ற பிள்ளைகளின் வாழ்வு
விடுதலை தேசத்தை
கொடுக்குமெனில்
அது வரங்கள் நிறைந்தது தான்
பெற்றோரை இழந்த
பிள்ளைகளின் கண்ணீர்
எங்கள் தாயகத்தை
தந்துவிடுமெனில்
வலிகள்கூட சுகங்கள்
நிறைந்தவைதான்



ஈழம் ஒருநாள் மலரும்
அப்பா
அதன் விடுதலைக்காக
உங்கள் வழியை நாமும்
தொடருவோம் அப்பா
உங்கள் முகம் பார்த்து
காலங்கள் பல கடந்து
விட்டன
ஆனாலும் இறுதிப்பிரிவில்
ஈரவிழிகளால் நீங்கள்
பேசிய ஆயிரமாயிரம்
வார்த்தைகள்
என் இதயத்துடிப்பில்
தினமும் கேட்கிறது அப்பா
நீங்கள் இருக்கீறீர்களா
இல்லையா என்பது கேள்வி.
இருக்க வேண்டும் என்று
என் மனம் தினமும்
ஏங்கிறது அப்பா.
அப்பா கண்ணீரில் கரைந்தது போக
மிச்சமிருக்கும்
எழுதிமுடித்த இந்த மகளின் கடிதம்
உங்களைச் சேர
நான்
எந்த முகவரிக்கு
அனுப்புவது?




இப்படிக்கு
தாய்நாட்டிற்காக
தந்தையை பிரிந்த செல்லமகள்

**கலை**

# சொந்தமண்

சிறுகதை

"கந்த....ஆ...ஆ..அ ..அ"

முருகேசரின் இந்த அழைப்பு அந்தக் கந்தக் கடவுளுக்குக் கேட்டதோ என்னவோ, அந்த பாரிய வேப்ப மரத்தின் கீழ், பாத்தியிலிருந்து பிடுங்கி நாற்புறமும் எறிந்துவிட்ட பனங்கிழங்குகள் போல் படுத்திருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்குக் கேட்டது. அவர்களின் தூக்கமும் சற்றுக் கலைந்தது.

முருகேசர் எழுந்து நின்றார். ஏதோ ஒரு திசை நோக்கிக் கை கூப்பி மீண்டும் "கந்தா, கந்தா ஆ,ஆ" என்றழைத்தார். தளர்ந்திருந்த நாலுமுழத்தைச் சீராக உடுத்தார். நலமுண்டுத் துண்டை உதறி தோளில் போட்டார். குனிந்து சிறு துணிப்பை ஒன்றை எடுத்தார். புறப்பட்டு விட்டார்.

தூரத்தில் சேவல் ஒன்றின் "கொக்கரக்கோ" கேட்டது. நேரம் அதிகாலை நாலரைமணியாக இருக்கும். இயல்பு நிலை குறையாமலிருந்தால், நல்லூர் கந்தசாமி கோயில் ஆயத்தமணி நாதம் முருகேசரின் கோண்டாவில் விவசாயிகளைத் துயிலெழுப்பி அவரவர்கள் தோட்ட நிலங்களுக்கு அனுப்பியிருக்கும். அவர்களுடன் முருகேசரும் நார்க்கடகத்தில் இலைச்சருகுகளைத் தலையில் தாங்கி, தோளில் மண்வெட்டியுடன் தன் நிலத்தை நோக்கி சென்றிருப்பார்.

இன்று.....?

"எங்கு செல்கிறோம்" என்ற இலக்கின்றி, "என்ன செய்யப் போகிறோம்" என்ற விடை கிடைக்காத வினாவைச் சுமந்து கொண்டு அலை அலையாக வந்த பல நூறாயிரம் மக்கள் வெள்ளத்தில் ஒரு துளி முருகேசர். அத் துளியோடு ஒட்டிக்கொண்ட மற்றிரு துளிகள் மனைவி மீனாட்சியும், மகள் பூமணியும்.

மனிதத் திரட்சியை ஊடறுத்தோ அல்லது அதனுடன் அள்ளுண்டோ செல்ல இயலாமல் வீதி ஓரத்தில் ஒதுக்கப்பட்ட சில நூறு மனிதருள் இவர்களும் சேர்த்தி. கைதடி வயோதிபர் இல்லத்துக்குச் சற்று அப்பால் வீதியை முகப்பாய்க் கொண்ட பெரிய வெறுங்காணியினுள்ளே கண்ட பாரிய வேம்பு இவர்களுக்குத் தற்காலிக புகலிடந் தந்தது.

இரவு தங்கிச் செல்லலாம். குழந்தை குஞ்சுகளுடன் தாய்மார் பலர், வயோதிபம் வாட்டும் ஒரு சிலர், வெவ்வெறு நோய் நொடி கண்டவர்கள், ஆணும், பெண்ணுமாய் இளசுகள் என்பவர்களோடு மூட்டை முடிச்சுகளும் அங்கு பரந்து கிடந்தன. ஆடுகள், குட்டிகள் அங்கும் மிங்கும்,

நாய்கள் சில. ஓடித் திரிந்தன பல சைக்கிள் கள்.முருகேசரின் "கந்தா" அழைப்பொலி கேட்டு மீனாட்சியும், பூமணியும் விழித்தெழுந்து அமர்ந் தார்கள். அவர் புறப்பட்டு விட்டார் என்பதைக் கண்டதுமே அவர்கள் சுறுசுறுப்பானார்கள். அவருடைய போக்கு அவர்களுக்குப் பழக்கமானது. அவர் எந்த நேரத்தில் என்ன செய்வார் என்று குறிப்பாலுணர்ந்து இவர்கள் நடந்து கொள்ள வேண்டும். நடந்து கொள்வார்கள். "ஏன்" என்று கேட்க மாட்டார்கள். அவர் செய்வதெல்லாம் "சரி" என்பது இவர்கள் தீர்மானம்.

தாமதமின்றி தமது சிறிய பைகள் இரண்டைத் தூக்கியோராய் முருகேசரைத் தொடர ஆயத்தமானார்கள். புறப்பட்ட முருகேசருக்கும் வீதிக்குமிடையே முப்பது மீற்றர் தூரம். வழியில் கால்மாடு தலைமாடு பேதமின்றி ஆண், பெண்.

சிறுவர் சிறுமியர், பரந்து படுத்திருந்தார்கள். மிகச் சாவதனமாக காற் சுவடுகளைநீட்டியும், மக்களைத் தாண்டி அவர் வீதிக்கு சென்று மிதக்க முடிந்தது. மீனாட்சியும் மகளும் சிரமங்களினூடாக ஒருவழியாக வீதிக்கு வந்து விட்டார்கள்.

வீதியில் மக்கள் நடமாட்டந் தொடங்கி விட்டது. மங்கிய ஒளியிலும் பூமணி வீதியின் இருபுறமும் கூர்ந்துநோக்கினாள். அசாதாரண உயரம் கொண்ட முருகேசர் எந்தக் கூட்டத்தில் நின்றாலும் இலகுவில் கண்டு கொள்ளலாம். கைதடிச்சந்தியை நோக்கிச் செல்வோரிடையே

அவரில்லை. எதிர்புறம் நாவற்குழிக்கு போகும் திசையில் முருகேசரின் வேகநடை தெரிகிறது. நேற்று வந்த பாதையில் திரும்பிச் செல்கிறார்.

"ஏன்? வீடு நோக்கியா?"

**- இராஜநாயகன் -**

ஒட்டமும் நடையுமாய் இருவரும் முருகேசருக்குப் பின்னால் பத்து மீற்றர் தூரத்துக்கு வந்து விட்டார்கள். நாவற்குழி சந்தி எதிரே ஒரு காலத்தில் புகைவண்டி நிலையமாகவிருந்த இடத்தில், மேடை அடங்க மக்கள் படுத்துக் கிடந்தார்கள். முருகேசர் நின்றார். துணிப்பையைத் தோளில் கொழுவினார். கைகளை உச்சியில் குவித்து நான்கு திசையும் சுற்றி சுற்றி வணங்கினார்.

“கந்தா“ என இரங்கி அழுவாராய் அவனிடம் விடை பெற்றார். பின்னர் கேரதீவுப் பாதையில் நடக்கத் தொடங்கினார்.

வைகறை ஐந்து மணி இருக்கும். நாவற்குழி குடிமனையுடாகச் செல்லும் வீதியின் இரு மருங்கும் சாக்குகள் விரித்து சில்லறைக்கடைகள் முளைத்துக் கொண்டிருந்தன. பாதையின் ஓரத்திலிருந்த வெறும் காணிகளுள் மரங்களின் கீழும், வான்முகட்டின் கீழும் இடம்பெயர்ந்தோர் பலர் நித்திரையிலிருந்தார்கள்.

முருகேசரின் இயல்பு நடை வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவர் மனைவியும் மகளும் நாயோட்டத்தில் சென்றார்கள்.

மறவன் புலவு

இரு புறமும் வயல்கள், நெற் பயிர் சோர்ந்து கிடக்கிறது. ஒரு வயலோரத்தில் சிறு கொட்டில் கோயில். வயல் காக்குந் தெய்வக் கோயில். காலைப் பூசைக்கு ஆயத்தங்கள் நடை பெறுகின்றன.

முருகேசர் நின்றார் கோயிலின் வடகிழக்கு மூலையில் வயலோரத்தில் ஒரு கிணறு. கை வாளியால் நீர் மொண்டு கை கால் முகம் கழுவியும் நீர் குடித்தும் சிலர் மீண்டனர்.

கிணற்றடியில் எவருமில்லாத போது முருகேசர் அங்கு போனார். நலமுண்டுத்துண்டையும், துணிப்பையையும் ஒரு கல்லின் மேல் வைத்தார். நாலுமுழத்தோடு ஒரு காகக் குளிப்பு குளித்தார். ஈரவேட்டியுடலுடன் கோவில் வாயிலுக்கு வந்தார். இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி மீனாட்சியும் மகளும் கிணற்றடிக்குப் போய் கை, கால், முகம் கழுவி, தாக சாந்தி செய்து கோயிலுக்கு வந்தார்கள்.

“அரோகரா“ ஒலி மத்தியில், சுவாமிக்குப் பஞ்சாலாத்தி காட்டிக் கொண்டிருந்தார் பூசகர். இவர்களும் தரிசித்து வணங்கினார்கள்.

விபூதிப் பிரசாதம் பெற்றார்கள். பின்னர் அங்கு நின்ற பத்துப் பன்னிரண்டு பேரிடையே முருகேசரைத் தேடினார்கள். அங்கு அவரில்லை.

வீதியை திரும்பி பார்த்தார்கள். நேர் வீதி. பார்வை செல்லும் தூரம் வரை இரு புறமும் பார்த்தார்கள்.

அவரைக் காணவில்லை.

ஈர வேட்டி நல்ல உயரம். சிறிய துணிப்பை அடையாளங் கூறி விசாரித்தார்கள்.

சற்று முன்னர் அவர் கேரதீவுப் பக்கஞ் சென்று விட்டாராம். இவர்கள் வீதியில் இறங்கி நடக்க தொடங்கினார்கள். வீதியிலெங்கும் அந்த நெடிய உருவத்தைக் காணவில்லை.

இவர்களுக்குப் பின்னால் சிறுவனொருவன் ஓடி வந்தான். அவர்களிடம் ஒரு துணிப்பையைக் கொடுத்தான்.முருகேசரின் பை.

“இது ஆர் தந்தது?“

“அந்த ஐயா உங்களிட்ட கொடுக்கட்டாம்“

“அந்த ஐயா எங்கை?“

“குடுக்கச் சொல்லிட்டுப் போட்டுப் போட்டார்.“

சிறுவன் கேரதீவுச் சந்திப் பக்கம் கை நீட்டிக் காட்டினான்.

பூமணி பையினுள்ளே பார்த்தாள். ஒரு கடதாசிப்பை உள்ளே சில பணத்தாள்கள் எண்ணினாள். சிறிய, பெரிய தாள்களில் நாலாயிரத்தறு நூறு ரூபா.

“அம்மா இதுக்கை காசிருக்கு“

அம்மாவுக்கு இது கேட்கவில்லை. கணவனைக் காணாத, பறிகொடுத்த தமிழச்சியாய் அவள் நினைவிழந்தாள். நிலத்தில் சரிந்து விழவிருந்த தாயை மகள் அணைத்தாள். நிலத்தில் அமர்ந்து,தாயின் தலையைத் தன் மடியில் தாங்கினாள்.

மீனாட்சிக்கு வியர்த்துக் கொட்டியது. குளிர்ந்த இந்த காலை வேளையில் இப்படி ஒரு வியர் வையா? பசியா?

துணிப்பையால் தாயின் முகத்தைத் துடைத்தாள். துடைத்தலைத் தொடர்ந்த போது பூமணிக்கு அழுகை வந்து விட்டது.

பரம்பரைபரம்பரையாக சீவிய காலம் முழுவதும் சிறுக சிறுக சேர்த்த உடமைகளை தற்காலிகமாகவேனும் கைவிட்டு, எங்கு? ஏன்?, என்ன செய்ய? எனப் புரியாமல் ஓரொரு துளியாகச் சென்று கொண்டிருந்த மனிதப்பேரவையில் எவரும் இவர்களைத் திரும்பியும் நோக்கவில்லை.

பேரவை நகரத் தொடங்கி விட்டது. வீதி நிறைந்து மக்கள் கிழக்குத் திசையில் நகர்கிறார்கள். வெயிலும் ஏறத் தொடங்கி விட்டது.

தங்கி ஆற நிழலில்லை. இப்படியே இருந்தால்......? மீனாட்சி சற்றுத் தேறி விட்டாள். கண்கள் திறக்க வெருட்சி தெரிந்தது. அரை மணிநேர மயக்கம் தீர்ந்து மகளின் மடியிலிருந்து எழுந்தாள்.

“அப்பா வந்திட்டாரா?“

பூமணி பதில் தரவில்லை.

“எழும்பு போய் தேடுவம்“

நடக்கத் தொடங்கினார்கள்.

கணவனைக் காணாத வெப்பியாரம் உள்ளே. வெளியே வெயில்.

ஒரு மணி நேர நகர்வின் பின் கேரதீவுச் சந்திக்கு வந்து சேர்ந்தார்கள். மர நிழலின் அரவணைப்பில் பலர் ஆறிக் கொண்டிருந்தார்கள். இவர்களும் அங்கு ஒதுங்கினார்கள்.

நகர்வதையே நோக்காக,வெயிலையும், களைப்பையும் பொருள் செய்யாது மக்கள் சாவகச்சேரி நோக்கி செல்கிறார்கள். சிறுவர், சிறுமியர் வாடிய கீரைத்தண்டுகளாய் பெற்றோரின் பின்னால் ஓட்டமும் நடையுமாய் செல்கிறார்கள். பூமணியும்,தாயும் பயணத்தைத் தொடர்ந்தார்கள். வழியெல்லாம் திரள் திரளாக மக்கள். இடைக்கிடையே சில வாகனங்களுக்கு இடம் விட்டு, வீதி ஓரத்தில் நிற்கும் நிலை.


சாவகச்சேரி எட்டாத தூரத்தில் இருப்பதாக இவர்களுக்குப் பட்டது.

அள்ளுண்டு சென்றார்கள். சாவகச்சேரிச் சந்தியை கண்ட போது முற்பகல் பதினொன்றரை மணிசந்தியில் விவரிக்க முடியாத நெரிசல். கூடு முழுவதையும் மொய்த்துப் புரளும் தேனீக்களாய் மக்கள் திரள். கேரதீவுப் பாதைத் திரளும் பிரதான வீதித் திரளும் அங்கு சங்கமித்துப் பெரும் திரளாய்ப்பரிமாணங் கொண்டது. இதை ஊடறுத்துச் செல்வது முயற் கொம்பு. போதாதற்குச் சில வாகனங்களும் நெரிசலைப் பிரமாண்டமாக்கிக் களேபரம் ஏற்படுத்தின.

மீனாட்சிக்கும், பூமணிக்கும் வாழ்வே வெறுத்த நிலை. இந்த நிலை இன்னும் எத்தனை ஆயிரம் பேருக்கு ஏற்பட்டதோ?

நகர்வுக்காய் மேற்கொண்டபல்லாயிரம் பகீரதப் பிரயத்தனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதின. பரிதாபக்குரல்களும்,அவல ஒலிகளும், குழந்தைகளின் அழுகுரல்களும் அந்தச் சதுக்கத்தையே உருக வைத்தன.

அலையால் எற்றுண்ட துரும்புகளாய் அள்ளுண்டு இந்துக் கல்லூரிக்குள் இருவரும் ஒதுக்கப்பட்ட போது நேரம் ஐந்து மணிக்கு மேலிருக்கும்.



பசியையும் தாகத்தையும் விஞ்சிய களைப்பு.

பல நூறு மக்கள் நின்றும்,நடந்தும், இருந்தும், கிடந்தும் உள்ளிடத்தை நிரப்பி இருந்தார்கள். இந்த இருவருக்கும் குந்தி இருக்க ஓரிடம் கிடைத்து விட்டது.

“கந்தா, முருகா“

மீனாட்சி தண்ணீர் மட்டும் குடித்தாள். பக்கத்தில் இருந்த சிறுமியொருத்தியுடன் பூமணி பலகாரத்தைப் பகிர்ந்து உண்டாள்.

நான்கு நாள். இரவும் பகலும் வருவோரும், தங்குவோரும், வெளியேறுவோரும், “அடுத்து என்ன?“ என்ற பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாத மக்களின் அவலங்களுக்குச் சான்று ஆயினர்.

முருகேசரோ அவரின் சுவடோ காணப்படவில்லை. காலை நேரங்களில் கஞ்சி, பிற்பகல் சிறிய சோற்றுப் பொட்டலம். எவரோ புண்ணியாத்மா அரிசியும் பருப்புந் தர, அங்கு ஒதுங்கி இருந்த

பெண்கள் சமைத்துப் பகிர்ந்து வழங்கினார்கள்.

ஐந்தாம் நாள் காலை முருகேசர் அங்கு வந்தார். நாலு முழம் மட்டும். நலமுண்டைக் காணவில்லை. அவரது திருநீற்றுப்பட்டுப்பை அரையில் தொங்கிக் கொண்டிருந்தது.

நாலு புறமும் நோட்டம் விட்டார். பூமணி கண்டு விட்டாள்.

"அப்பா" என்ற கதறலுடன் அவரிடம் ஓடினாள். அவளை அணைத்தபடி, அவர் மீனாட்சி அருகில் வந்து ஒதுங்கி அமர்ந்தார்.

"போன உயிர் மீண்ட" உணர்வில் மீனாட்சி மிதந்தாள்.

யுவதிகள் சிலர் உணவுப் பண்டங்களை அங்கும் இங்கும் திரிந்து கொடுத்தார்கள். குறிப்பிட்ட சிலருக்கு, அவர்கள் அருகில் சென்று மருந்து வில்லைகளும் தந்தார்கள்.

அவர்கள் அணிந்திருந்த காற்சட்டை சேட்டும், அவர்களின் சுறுசுறுப்பும் முருகேசர் கவனத்தை ஈர்த்தன. யுவதிகள் காட்டிய ஆதரவும், அரவணைப்பும் தனக்கும் கிடைத்தாற்போல முருகேசர் ஆயாசந் தீர்ந்தார்.

"அப்பா! அம்மாவைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கோ" என்ற பூமணி முருகேசரின் மடியில் அவர் துணிப்பையை வைத்தாள். அதனுள் அவள் எடுத்துச் செலவிட்ட தொகை போக மிகுதிப் பணம் இருந்தது.

"ஒருக்காப் போட்டு வாறன்."

பெற்றோரை இரண்டு மூன்று தடவைகள் திரும்பிப் பார்த்தவள் சிரித்துக்கொண்டே நடைவேகத்தை அதிகரித்தாள்.

உள்ளம் பூரித்தவளாய் மீனாட்சி எழுந்தாள்.

"நான் ஒருக்கா முகங் கழுவிப்போட்டு வாறன். இருந்து கொள்ளுங்கோ."

பத்து நிமிஷங் கழித்து திரும்பி வந்தாள்.

முகத்தைத் துடைத்துக் கொண்டே "உங்கடை வீபூதியிலை கொஞ்சம் தாருங்கோ" என்றாள்.

"என்னட்டை வீபூதி இல்லை மீனாட்சி"

"உங்கை பை வைச்சிருக்கிறியள், கொஞ்சம் எண்டாலும் கிடக்குந் தானே" முருகேசர் சிரித்தார். வழமைக்கு மாறாகக் கதைக்கத் தொடங்கினார்.

"இரு பக்கத்திலை இரு. இதுக்குள்ளை என்ன இருக்கெண்டு பார்!"

பையை எடுத்துச் சுருக்கைத் தளர்த்திக் காட்டினார்.

உள்ளே விபூதி இல்லைத்தான்.. செந்நிறத்தில் ஏதோ இருந்தது.

"என்னப்பா இது?"

"பொறு சொல்லிறன். இந்த பயணத்திலை நான் தற்செலாக் கண்ணை மூடிட்டா? எனக்கு போடிற வாய்க்கரிசி இதுதான். இது எங்க வீட்டு தோட்டத்துமண் செம்மண்சொந்தமண்.

மீனாட்சி விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

"அழாதை மீனாச்சி! மனிசன் காரியம் நிச்சயமில்லை. எதுக்கும் தயாராயிருக்கவேணுமெல்லே" மீனாட்சியின் அழுகை மேலும் வலுத்தது. அழுகையும் விம்மலும் ஓய நீண்ட நேரம் எடுத்தது. பின்னர் மீனாட்சியும் சிரித்தாள்.

"நான் முந்தீட்டா். உதிலை அரைவாசி எனக்கு" என்றாள்.

முருகேசரின் முகத்தில் புன்னகை தோன்ற முயன்று வேண்டாம் என மறைந்து விட்டது.

இந்த சிறிய சம்பாஷணையின் எதிர்விளைவு அத் தம்பதியினர் மேல் மௌனமாய் கழிந்தது.

மதியங் கடந்து விட்டது. யுவதிகள் இருவர் வந்து மீனாட்சியைப் பார்த்துவிட்டு, மூன்று உணவுப் பொட்டலங்களைத் தந்து சென்றார்கள்.

"ஓ பூமணியை இன்னுங் காணவில்லை. அவள் போய் எவ்வளவு நேரம்

ஐந்து மணித்தியாலங்களுக்கு மேல்"

மீனாட்சியை கலக்கம் பிடித்துக் கொண்டது. உணவுப் பொட்டலங்கள் பிரிக்கப் படாமலே இருந்தது.

முருகேசர் நிஷ்டையில் இருப்பவர் போல மௌனித்திருந்தார். மீனாட்சி இடைக்கிடையே எழுந்து போய் வீதியின் இருபுறமும் பார்த்து ஏமாற்றமே உருவாகத் திரும்பி வந்தாள். மாலைப் பொழுது. மீனாட்சி பொறுமையின் எல்லையில் நின்றாள்.

"ஒருக்கா போய்த் தேடிப் பாருங்கோவன்"

முருகேசர் சிரித்தார்.

"அவள் எங்கடை மகள். அவள் பிழை செய்வாளே? எங்கை போனாள்? ஏன் திரும்பி வரேல்லை என்று கூட யோசிக்காதை"

தன் மடியில் செருகியிருந்த அந்தப் பையை எடுத்து மீனாட்சியிடம் கொடுத்தார்.

"கவனமாக வைச்சிரு"

# எங்கேம்மா இருக்கிறாய்?

அம்மா!!
எங்கேம்மா இருக்கிறாய்? என்னபாடு படுகிறாய்?
பூசாவில் என்கிறார்கள் பூமாலை போலிருந்தாய்
நாலாம் மாடியில் நார்நாராய்க் கிழிக்கிறார்கள்
நிர்வாணப் படுத்தியுன்னை நிதம்
வன்புணர்வு செய்கிறார்கள்
பல்லாயிரம் பேச்சுக்கள் எமை
பதைபதைக்க வைக்கிறது
எண்ணாத எண்ணமெல்லாம்
நடு நடுங்க வைக்கிறது.
கட்டாயம் நீ வருவாய்
நித்தம் வழி பார்த்து
விழி சோர்ந்து கிடக்கிறது.
எங்கேம்மா இருக்கிறாய்??
என்னபாடு படுகிறாய்??



காவலரண் வாசலிலே
காலிகளைக் கண்டவுடன் – நீ
கதி கலங்கிப்போனாய்
உன் அம்மாவின் கைபிடித்து
என்னை ஒப்புவித்தாய்
காலில் பட்ட காயம் வலிக்கவில்லை எனக்கு.
கைவிட மறுத்து நான் கதறி அழுததும்
கொத்தாக உன் தலைமுடி பிடித்திழுத்து
கொடியவர் ஆடிய கோரத் தாண்டவமும்
என் வாழ்வில் எப்போதும் மறந்து போகுமா?

பாலகர் நாங்கள் பரிதவித்துப் பார்த்திருக்க!
நடை தளர்ந்தோர் நடைப்பிணமாய்
ஓலமிட்டுக் கூவியழ!
இளவயதுப் பெண்டிரை
இழுத்தெடுத்துச் சென்றாரே!
துப்பாக்கி தரித்த சிங்கள இனவெறியர்!!
அல்லல்பட்டு நின்ற நேரம்
என் வயது மூன்றுதான்..
பன்னிரெண்டு ஆண்டாச்சு!
பருவத்தில் நானுள்ளேன்.

பெண்களின் பிரச்சனைகள் இப்போ
பெரும் பூதமாய்த் தெரிகிறது.
ஐயோ!! ஐயோவென்று
மனம் கிடந்து துடிக்கிறது
எங்கேம்மா இருக்கிறாய்??
என்னபாடு படுகிறாய்??
காணாமற் போனோரில்
நீ இன்னும் இருப்பாய் என்ற
நீங்காத நம்பிக்கை
உன் நடைதளர்ந்த அம்மாவை
இன்னும் நகர்த்திச் செல்கிறது.
அவள் போகாத கோவிலில்லை!
இறைஞ்சாத தெய்வமில்லை!

போகுமிடமெல்லாம் உன்
புகைப்படத்தைக் காட்டுவாள்
காண்போரிடமெல்லாம்
உனைப்பற்றி விசாரிப்பாள்!
வீதி மறிப்பு, உணவு மறுப்பு
அனைத்திலும் அவளிருப்பாள்!
பூஞ்சையாய்ப் போன கண்கள்
பகலெல்லாம் விழித்திருக்கும்!
நடுநிசியோ உலகின் அவலமெல்லாம்
மனக்கண்முன் கொண்டுவரும்..

துடித்துப் பதைத்தெழுவாள் உன் அன்னை
'அம்மோய்' எண்டு
என்பிள்ளை அலறினாள்
கேட்டதா உனக்கென்று கேள்விகள் கேட்டிடுவாள்
நள்ளிரவிலும்கூட கண்விழித்துப் பார்த்திருப்பாள்
தள்ளாத வயதில் அந்தத் தாயுள்ளம் தவிதவிக்கும்
ஏதேதோ மனப்பிரமை
என்னை நடுங்க வைக்கும்
எங்கேம்மா இருக்கிறாய்??
என்னபாடு படுகிறாய்??

- கார்த்திகை -

முள்ளிவாய்க்கால் 2009
Mullivaikal 2009
சிறப்பு வெளியீடு

# என் பிஞ்சுவிரலால் உன்கரம் தொட்டேன்

அப்பா
என் பிஞ்சுவிரல்களில்
உன் கைகோர்த்து
துள்ளித் திரிந்த நாட்கள்
கனவாக என் நினைவில் என்றும்

மணல்பாதை வழியே
மண்ணில் கால்கள் புதைய
உன் கைகோர்த்து நடந்த
காலடித்தடங்கள் இன்றும்
என் நினைவில் அழியாத தடமாக!

அப்பா!!!
உன் கம்பீர நடையுடன்
கை கோர்த்து நடந்திட முடியாமல்
கண் கலங்கி நிற்கும் வேளையில்
கள்ளச்சிரிப்புடனே எனை
உன் தோளமர்த்தி
நடந்திடும் வேளையில்
மாவீரர் வழித்தடங்களில்
மகத்தான தியாகங்களை
கதையாக கூறி என்
மனதில் தேசப்பற்றதனை
விதையாக தூவி
மரமாக வளர்த்தாயே!
அப்பா!!!
நோயுற்று நான் படுத்தவேளை



அல்லும் பகலும்
அனுதினமும் அகலாது
கண்ணை இமைகாப்பது போல்

கருத்துடனே எனைக்காத்து
நாடும் வீடும் இரு கண்களென
சொன்னாயே!
கோழையாக நூறு நாள்கள்
வாழ்வதை விட
வீரனாக
ஒருநாள் வாழ்வதே
மேலேன
கரம்பிடித்து நடந்திடும் வேளை
அச்சமின்றி வாழும்
நம்பிக்கை தந்தாயே!

அப்பா
வீரனாக விழிமூடி நீ
துயின்ற போது என்
பிஞ்சுவிரலால்
உன்கரம் தொட்டேன்
சில்லிட்ட உன்கரம்
எனக்கு ஏதோ கடமையை
நினைவூட்டியது

– மகிழினி –

